# MALAVIKAGNIMITRAM

AN ADAPTATION OF

## Kalidasa's Samskrit Drama

IN TAMIL

BY

**Rao Bahadur P. SAMBANDAM,**

B.A., B.L.,

Author of:

" The Two Sisters," "Galava." "Vikramorvasi" "Blind Ambition," "The Two Friends," "Fate and Love," " Sarangadhara," " Simhalanatha," " Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," " Markandeya," " The Fair Ghost," " The Merchant of Vanipura," " The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," "Chandrahari," "The Demon Land," "Sabapathy Part I," "The Pongal Feast" or "Sabapathy" Part II, "A Rehearsal" or "Sabapathy" Part III, " Blessed-in a Wife," " The Dancing Girl " " Subbadra-Arjuna " " Karna-The Giver " "Sahadeva's Stratagem" "Bricks Between & At Any Cost" "Surgeon General's prescription & Vichu's Wife" " Sakuntala " "The Point of View & The Two Selves" "Manohara" etc. in Tamil; and "Harischandra," and " Yayathi " in English.

*FIRST EDITION.*

Madras:

PRINTED BY DOWDEN AND CO., AT THE " PEERLESS PRESS,"

21, Sunkurama Chetty Street.

1930

*All Rights reserved.*] [Price per Copy As. 10.

# மாளவிகாக்னிமித்ரம்

காளிதாச மஹாகவி சம்ஸ்கிருதத்தில் எழுதிய
நாடகத்தின் தமிழ் அமைப்பு.

ராவ் பஹதூர்

**ப. சம்பந்த முதலியார்,** பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :—
"லீலாவதி-சுலோசனை" "கள்வர் தலைவன்," "விக்கிரம ஊர்வசி"
"இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்,"
"சத்ருஜித்," "யயாதி" "மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்,"
"காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே." "மகபதி,"
"மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்,"
"விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "காலவரிஷி,"
"வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்,"
"ரத்னாவளி," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "பிரஹசனங்கள்,"
"ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்" "சபாபதி-முதற் பாகம்,"
"பொங்கல் பண்டிகை" அல்லது சபாபதி இரண்டாம் பாகம்,
"ஓர் ஒத்திகை" அல்லது சபாபதி மூன்றாம்பாகம், "வள்ளிமணம்"
"முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்," "புத்த அவதாரம்,"
"வேதாள உலகம்," "மனைவியால் மீண்டவன்," "தாசிப்பெண்"
"சுபத்திரார்ஜுனா" "கொடையாளி கர்ணன்" "சகதேவன் சூழ்ச்சி"
"இடைச்சுவர் இருபுறமும் - என்ன நேர்ந்திடினும்" "சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து-விச்சுவின் மனைவி" "சகுந்தலை"
"நோக்கத்தின் குறிப்பு - இரண்டு ஆத்துமாக்கள்" "மனோஹரன்"
முதலியன.

முதற் பதிப்பு

சென்னை :
டௌடன் கம்பெனியாரின்
பியர்லெஸ் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1930

காபி ரைட்]

[விலை அணா 10.

# PREFACE.

This is an adaptation of Kalidasa's Samskrit drama entitled Malavikagnimitra. Following the principle I have adopted with reference to Sakuntala & Vikramorvasi, I have omitted certain passages which are not essential for modern stage purposes.

Persons desirous of staging this or any other drama by me, are informed that they will have to pay a small royalty and take my previous permission before doing so, otherwise they become liable to be prosecuted under the latest Copyright act in a Criminal Court.

"PAMMAL LODGE"
G. T. MADRAS.
5th March 1930.

The Author.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

**MY PARENTS**

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL,

and

**MY FRIEND**

C. RANGAVADIVELU

# மாளவிகாக்னிமித்ரம்

## நாடக பாத்திரங்கள்

| | |
|---|---|
| அக்னிமித்ரன் ... | ... கதாநாயகன், விதீச நாட்டரசன் |
| கௌதமன் ... | ... அரண்மனை விதூஷகன் |
| வாஹதகன் ... | ... அரசனது பிரதான மந்திரி |
| ஹரதத்தன், கணதாசன் ... | அரண்மனையில் நாட்டியம் கற்பிக்கும் இரண்டு ஆசாரியர்கள் |
| மௌத்கல்யன் ... | ... அரண்மனை கஞ்சுகி |
| சாரசகன் ... | ... தாரிணியின் வேலையாள் |
| மாளவிகை ... | ... கதாநாயகி, மாதவசேனன் தங்கை |
| தாரிணி, ஐராவதி ... | ... அக்னிமித்ரன் மனைவியர்கள் |
| பரிவ்ராஜிகை ... | ... ஓர் சன்யாசினி |
| ஜெயசேனா ... | ... பிரதீஹாரி, அந்தப்புற வாயில் காப்பவள் |
| பகுளவளிகை, கௌமுதிகை ... | ... தாரிணியின் பாங்கிகள் |
| நிபுணிகை ... | ... ஐராவதியின் பாங்கி |
| மதுகரிகை ... | ... தோட்டக்காரி |

வேலையாட்கள், வேலைக்காரிகள் முதலியோர்.

# மாளவிகாக்னிமித்ரம்

## முதல் அங்கம்

### முதற் காட்சி

இடம்:—அரண்மனையில் சங்கீதசாலைக்கெதிர் முற்றம்.

பகுளவளிகை வருகிறாள்.

ப. நாட்யாசாரியரான பூஜ்ய கணதாசரால், 'சலிதம்' என்னும் புதிதான நாட்யம் கற்பிக்க ஆரம்பிக்கப் பட்ட மாளவிகை, அதில் என்ன தேர்ச்சி அடைந்திருக்கிறாள் என்று அறிந்துவரும்படி, தேவி தாரிணியவர்களால் ஆக்கியாபிக்கப்பட்டேன். ஆகவே சங்கீத சாலைக்குப் போய்ப் பார்க்கிறேன்.

கௌமுதிகை கையில் ஓர் ஆபரணத்துடன் வருகிறாள்.

ஏ! கௌமுதிகை,—நான் பக்கத்திலிருந்தும் என்னைப் பார்க்காது போகிறாயே—உன் மனம் எங்கே இருக்கிறது?

கௌ. ஆ! இதோ பகுளவளிகை!—சகி, தட்டானிடமிருந்து கொண்டு வந்த அஹி முத்திரையுடைய, அரசியின் இவ்வழகிய மோதிரத்தைக் கவனித்துக்கொண்டிருந்தபடியால், உனது நிந்தனைக்குப் பாத்திரமானேன்.

ப. [அதைப் பார்த்து] பார்க்கத்தக்க பொருளின் பேரிலேயே உன் திருஷ்டி படிந்திருந்தது; நான்கு புறமும் காந்திவீசும் இம்மோதிரத்தின் ஒளியினால் உன் முன்னங்கையானது மலர்களினால் அலங்கரிக்கப்பட்டது போல் பிரகாசிக்கின்றது.

கௌ. சகி, நீ எங்கு போகிறாய்?

ப. மஹாராணி அவர்களின் கட்டளையினால், நாட்யாசாரிய ராகிய பூஜ்யகணதாசரிடம், நாட்யம் கற்பதில் மாளவிகை என்ன தேர்ச்சியடைந்திருக்கிறாள், என்று நேராகக் கேட்கப்போகிறேன்.

கௌ. சகி, இத்தொழிலினால் அரசர் கண்படாதபடி அகற்றப் பட்ட போதிலும், அவள் அரசரால் பார்க்கப்பட்டாள் என்று நான் கேள்விப்படுகிறேன்.

ப. ஆமாம்! அப்பெண், ஒரு படத்தில் அரசியின் பக்கத்தில் பார்க்கப்பட்டாள்.

கௌ. அது எங்ஙனம்?

ப. கேட்பாயாக; அப்பொழுதுதான் சித்ராசிரியர் வரைந்த வர்ணம் உலராத ஓர் படத்தை, தேவியவர்கள் பார்ப்பதற் காகச் சித்ரசாலைக்குப்போய் அப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர், அச்சமயம் அரசர் அங்கு வந்து சேர்ந்தார்.

கௌ. பிறகு என்ன நேர்ந்தது?

ப. பிறகு, உபசாரங்களெல்லாம் முடிந்தவுடன், அரசி யுடன் ஒரே ஆசனத்தில் உட்கார்ந்த அரசர், படத்தில் பக்கத்தில் வரையப்பட்ட பாங்கியருள் அரசியின் அரு காமையிலிருந்த மாளவிகையைப் பார்த்து, அரசியைக் கேட்டார்.

கௌ. என்னவென்று?

ப. "உன் பக்கத்தில் வரையப்பட்ட இப்புதிய பெண்யார்? இவள் பெயர் என்ன?" என்று கேட்டார்.

கௌ. அவனியில் ஆச்சர்யகரமான அழகிய உருவம் அவரது மனதைக் கவர்ந்தது சகஜமே—அதன் பின் என்ன நேர்ந்தது?

ப. பிறகு அரசர், அரசி அவரது வார்த்தைகளுக்குப் பதில் கூறுதிருக்கவே, சந்தேகம் கொண்டவராய், பதிலுரைக் கும்படி பலவந்தித்தார் பன் முறை; அப்பொழுதும் அரசி உத்தரம் அறையாமலிருக்க, ராஜகுமாரி வசுலட்சுமி, "அப்பா, இது மாளவிகை" என்றுள்.

கௌ. [புன்நகையுடன்] அங்ஙனம் செய்தது குழந்தைகளின் சுபாவத்திற் கேற்றதே—பிறகு என்ன நேரிட்டது என்னிடம் சொல்.

ப. இது தான், வேறென்ன? மாளவிகை மன்னன் கண்ணெதிர்ப்படாதபடி ஜாக்கிரதையாகக் காப்பாற்றப்பட்டு வருகிறுள். .

கௌ. சகி, இனி உன் வேலையைப்பார்-நானும் இம்மோதிரத்தை மஹாராணியிடம் கொண்டு போகிறேன்.

[கௌமுதிகை போகிறுள்.]

ப. இதோ, நாட்டியாசிரியர் பூஜ்யரான கணதாஸர், சங்கீதசாலையினின்றும் வெளியே வருகிறுர்; அவர் எதிர்ப் படுகிறேன்.

கணதாசர் வருகிறுர்.

ஆர்யரே, அடியாள் நமஸ்காரம் செய்கிறேன்.

க. நங்காய், சிரஞ்சீவியாய் வாழ்வாயாக !

ப ஆர்யரே, உமது சிஷ்யையான மாளவிகை, நாட்டியம் கற்பதில் உமக்கு அதிக கஷ்டம் கொடாமலிருக்கிறுளா என்று அரசியவர்கள் விசாரித்து வரச்சொன்னுர்கள்.

க. மாளவிகையானவள், மிகவும் சாதுர்ய முடையவளென்றும் மிகுந்த மேதாவியென்றும் அரசியிடம் அறிவிப்பாய் —அதிகமாய்ச் சொல்வதேன்? நடிப்பதில் என்னென்ன பாவங்களெல்லாம் என்னுல் அவளுக்குக் கற்பிக்கப் படுகின்றனவோ, அவைகளை யெல்லாம் அதிக அழகுற

நடித்துக்காட்டி, எனக்கு அவைகளிலுள்ள அற்பு தங்களைத் திருப்பிச்கற்பிக்கிருள்.

ப. [தனக்குள்] ஐராவதியைவிட மேம்பட்டு விட்டாள் என மதிக்கிறேன்—[உரக்க] தனது ஆசிரியர் மனதை இவ்வளவு சந்தோஷிக்கச்செய்யும் சிஷ்யை கிரதார்த்தமுடையவளே !

க. நங்காய், இப்படிப்பட்ட நாரீமணிகள் நானிலத்தில் கிடைப்பது அரிதாதலால், அரசியவர்கள் இவளை எவ்விடமிருந்து கொணர்ந்தனர் என்று அறிய விரும்புகிறேன்.

ப. அரசியவர்களுக்கு, கொஞ்சம் தாழ்குலத்துதித்த வீரசேனர் என்னும் பெயருடைய தம்பியொருவர் உண்டு, அவர் நருமதை நதி தீரத்திலுள்ள ஒரு எல்லை துர்க்கத்திற்கு அதிபதியாக அரசரால் நியமிக்கப்பட்டார், அவரால், கலைகள்கற்க ஏற்றவள் எனக்கருதப்பட்டவளாய் இப்பெண், அவரது தங்கையிடம் அனுப்பப்பட்டாள்.

க. [தனக்குள்] அவளது உருவத்தின் அபூர்வமான அழகினால் அவள் உயர் குலத்துதித்தவளென்றே நான் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது, [உரக்க] நங்காய், அவள் விஷயத்தில் நான் கோரியது கைகூடுமென நம்புகிறேன்; ஏனெனில், மழைத்துளியானது முத்துச்சிப்பியில் விழுந்து முத்தாக மாறுவதே போல், உபாத்தியாயர் கற்பித்த வித்தையானது உத்தம பாத்திரமான சிஷ்யனிடம் அதிகப் பிரசித்தியை அடைகின்றது.

ப. சரி,— உம்முடைய சிஷ்யை எங்கே ?

க. பஞ்ச அங்க அபிநயம் இப்பொழுது அவளுக்குக் கற்பித்தபடியால், நான் சிரமபரிஹாரம் எடுத்துக்கொள்ளும்படி கட்டளையிட, நந்தவனத்துத் தடாகத்துக்கெதிரே

யுள்ள பலகணியருகிற்போய் அங்கு வரும் மந்தமாருதத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறுள்.

ப. ஆனல், தாங்கள் எனக்குப் போக உத்திரவு கொடுத்தால், அவளிடம் சென்று, தாங்கள் அவளது கலேபயிற்சியில் முற்றிலும் சந்தோஷமடைந்திருப்பதாகக்கூறி, அவளது உற்சாகத்தை அபிவிர்த்தி செய்கிறேன்.

க. அப்படியே போய்ப்பார் உன் தோழியை; எனக்கும் அவகாச மிருப்பதனல் நான் எனது இல்லம் செல்கிறேன்.

[போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

# இரண்டாம் காட்சி

இடம்:—அரண்மனையில் ஒரு மண்டபம்.

அக்னிமித்ரன் ஒருபுறம் உட்கார்ந்திருக்க,

அருகில் ஒரு நிருபத்துடன் மந்திரி நிற்கிருர்,

மற்ருெரு புறமாக பரிவாரங்கள் நிற்கின்றனர்.

அ. வாஹதகா, விதர்ப்ப தேசத்தரசன் என்ன செய்ய விரும்புகின்ருன்?

ம. அரசே, தன் விநாசத்தை விரும்புகிருன்.

அ. அவனது பதிலேக் கேட்கவிரும்புகிறேன் இப்பொழுது.

ம. தற்சமயம் இவ்வாறு பதில் அனுப்பியிருக்கிருன்; “பூஜ்யரான மஹாராஜா எனக்கெழுதியதாவது, ‘எனக்குத்தன் தங்கையைத்தாரமாகக் கொடுத்து என்னுடன் சம்பந்தம் செய்ய, உனது தாயாதியாகிய மாதவசேனன், என்பட்டணத்தை நோக்கிவருங்கால், வழியில் உனது

எல்லைக்காவலாளர்களால் எதிர்க்கப்பட்டு, சிறையாக்கப் பட்டான்; அவனும், அவன் மனைவியும், தங்கையும், உனக்கென்னிடமுள்ள மரியாதையின் பொருட்டு, சிறையினின்றும் விடுவிக்கும்படி, உடனே உத்தரவு செய்ய வேண்டும்'—என்று. தங்களுக்குச் சமானமான பந்துக்களிடம் அரசர்கள் இவ்வாறு நடப்பது சாதாரண வழக்கம் என்று தாம் நன்கு அறிவீர்கள், ஆகவே இவ்விஷயத்தில் பூஜ்யரான மஹாராஜா அவர்கள் ஒருபுறமும் சாராது மத்யஸ்தராயிருக்க வேண்டும்; அந்த ராஜகுமாரனது தங்கையைப்பற்றியோ, அவர்களைச் சிறைபிடித்த கோலாஹலத்தில் எங்கோ காணமற் போயினள்; என்றால் இயன்றமட்டும் அவர்களைத்தேடிக் கண்டுபிடிக்கப் பார்க்கிறேன் இப்பொழுது, மஹாராஜா அவர்கள் மாதவசேனன் கட்டாயமாய்ச் சிறையினின்றும் விடுபட வேண்டுமென்று விரும்பினால், தயவு செய்து இதை அவர்கள் கவனிக்க வேண்டும்—பூஜ்யரான மஹாராஜா அவர்கள் சிறையிட்ட எம்மைத்துனனாகிய மௌர்ய மந்திரியை விடுவித்தால், நானும் உடனே மாதவசேனனைச் சிறையினின்றும் விடுவிப்பேன்"—இதுதான் இந்நிருபத்தில் வரைந்துள்ளது.

அ. என்ன! தான் செய்வதற்கு நான் பிரதி செய்யவேண்டுமென்று என்னுடன பேரம் செய்கிறான் இம்மடையன்? வாஹதகா, விதர்ப்ப நாட்டரசன் சுபாவத்தில் எனது வைரி, அன்றியும் எனக்கு விரோதமாய் இக்காரியம் செய்திருக்கிறான், ஆகவே வீரசேனன் சேனாபதியாயிருக்கும் சைனியத்திற்கு, முன்பே தீர்மானித்தபடி, நமது பகைவர் பட்சம் சேர்ந்தவனாகக் கருதவேண்டிய இப்பாதகனைப் படுசூரணம் பண்ணும்படி நான் ஆக்ஞாபித்ததாகத் தெரிவிப்பாய்.

ம. மஹாராஜாவின் கட்டளைப்படி.

அ. உம்—இதைப்பற்றி உனது அபிப்பிராயம் என்ன?

ம. மஹாராஜா அவர்களுடைய கட்டளை சாஸ்திரயுக்த மானதே, நடப்பட்ட மரமானது நன்றாய் வேரூன்றா ததலால் பிடுங்கி எறிவதற்குச் சுலபமாவதேபோல, புதிதாய் ஓர் நாட்டைக் கைப்பற்றிய பகையரசன், கஷ்டமின்றிச் சுவாதீனப்படுத்தக்கவன், என்று கூறப்பட்டிருக் கிறது.

அ. ஆயின், இந்த ராஜ தந்திரத்தை வரைந்தவன் வசன மானது உண்மையாகுமாக! சேனாபதி இதை ஒரு சாக்காகக்கொண்டு, உடனே படையெடுக்கும்படி ஆக்கி யாபிக்கப்படட்டும்.

ம. அப்படியே.. [மந்திரி போகிறார்.]

விதூஷகன் வருகிறான் ஒரு புறமாக.

வி. "கௌதமா, அகஸ்மாத்தாய், நான் சித்திரத்திற்கண்ட மாளவிகையை, நான் பிரத்யக்ஷமாய்க்காணும்படி ஏதா வது ஒரு சூழ்ச்சி செய்" என்று மஹாராஜாவினால் நான் கட்டளையிடப் பட்டேன். அதற்கு நான் தகுந்தபடி யுக்தி செய்திருக்கிறேன்; அதை அரசரிடம் இப்பொ ழுது தெரிவிக்கிறேன்.

[அரசன் அருகிற் செல்கிறான்.]

அ. [தனக்குள்] இன்னொரு காரியத்தில் எனக்கு மந்திரியா யிருப்பவனை இதோ என் அருகில் வருகிறான்.

வி. மஹாராஜாவின் மனோபீஷ்டமெல்லாம் நிறைவேறுமாக!

அ. இபபடி உட்கார். [விதூஷகன் உட்காருகிறான்] நண்பனே, உனது புத்தியின் சூட்சுமத்தினால் நான் விரும்பிய பொருளை அடைவதற்கு ஏதாவது ஒரு மார்க்கம் கண்டு பிடித்தாயா?

வி. புத்திப்பிரயோகத்தின் சித்தியைப்பற்றிக் கேளும்.

அ. எப்படி? எப்படி?

வி. [காதில் ஏதோகூறி] இப்படித்தான் !

அ. பலே! நண்பனே! மிகவும் கெட்டிக்காரத்தனமாய் ஆரம்பித்திருக்கிறாய். இவ்விஷயத்தில் சித்திபெறுவது கடினமாயிருந்த போதிலும், நாம் பலன் அடைவோமெனக்கோருவதற்கு இடம் கொடுக்கிறது; ஏனெனில், ஒருவனுக்குக் கண் இருந்தும் வெளிச்சம் இல்லாவிட்டால் இருட்டில் ஒரு வஸ்துவைப் பார்ப்பது எப்படி அசாத்தியமோ, அப்படியே, இடையூறுகளையுடைய ஒரு காரியத்தைச் சாதிப்பதற்கு சகாயமான துணைவன் இன்றிமுடியாது.

திரைக்குப்பின் போதும்! போதும்! உமது அதிகமான வார்த்தையை அடக்கும்! மஹாராஜாவின் எதிரில் எவன் மேம்பட்டவன் எவன் கீழ்ப்பட்டவன் என்று சீக்கிரத்தில் வெளியாகும்!

அ. நண்பா, உன் யுக்தி எனும் மரமானது புஷ்பிக்க ஆரம்பித்துவிட்டது!

வி. அதன் பழத்தையும் சீக்கிரம் பார்ப்பீர்.

கஞ்சுகி வருகிறான்.

க. மஹாராஜா, மந்திரியவர்கள் தங்கள் கட்டளையை நிறைவேற்றிவிட்டதாகத் தங்களுக்கு விஞ்ஞாபனம் செய்யச் சொன்னார்; அன்றியும்—ஹரதத்தரும் கணதாசரும், தம்மைக் காண விரும்புகிறார்கள்.

அ. அழைத்துவா அவர்களை.

க. அரசர் கட்டளைப்படி

[போய் ஹரதத்தரையும் கணதாசரையும் அழைத்துக்கொண்டு வருகிறான்.]

ஹ. கண. மஹாராஜாவுக்கு ஜெயமுண்டாகுக!

அ. ஆசார்யர்களுக்கு நல்வரவு—அவர்களுக்கு இரண்டு ஆசனங்கள் கொடுங்கள்.

[பரிவாரங்கள் இட்ட இரண்டு ஆசனங்களில் இரண்டு பெயரும் உட்காருகின்றனர்.]

சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டிய இக்காலத்தில், ஆசாரியர்கள் இருவரும் ஏக காலத்தில் வந்ததின் காரணம் என்னவோ?

க. அரசே, கேட்பீராக! நான் இந்த அபிநய வித்தையைத் தக்க ஆசாரியரிடமிருந்து கற்றேன், அதை மற்றவர்களுக்கும் கற்பித்திருக்கிறேன்; அன்றியும் மஹாராஜா அவர்களாலும் மஹாராணி அவர்களாலும் நான் கௌரவம் பண்ணப்பட்டிருக்கிறேன்.

அ. இதை நான் நன்கு அறிவேன்—பிறகு என்ன?

க. அப்படிப்பட்ட நான், இந்த ஹரதத்தரால், அரண்மனைப்பிரதான புருஷர்கள் முன்னிலையில் "இந்த மனிதன் என் பாததூளிக்கும் சமானமாகாதவன்" என்று அவமானம் செய்யப்பட்டேன்!

ஹ. மஹாராஜா, இவர்தான் முன்பு என்னை "உண்மையில், உமக்கும் எனக்கும் உள்ள பேதம் சமுத்திரத்திற்கும் கடலுக்கும் உள்ளபேதமாம்," என்று வைதனர்; ஆகவே கலையிலும் கலை பயிற்றுவிக்கும் திறத்திலும் மஹாராஜா அவர்கள் இரண்டு பெயரையும் தயவுசெய்து பரீட்சிப்பாராக! தாங்கள் தான் எங்கள் இருவரையும் தக்கபடி பரீக்ஷிக்கத்தக்கவர்.

வி. இது சரியான பிரதிக்ஞையே.

க. சரியான யோசனை. மஹாராஜா அவர்கள் கவனமாய் எங்கள் இருவர் திறத்தையும் கேட்பாராக.

அ. கொஞ்சம் பொறுங்கள்—மஹாராணியவர்கள் ஏதோ நான் பட்சபாதமாயிருப்பதாகச் சந்தேகிக்கக்கூடும்; ஆகவே, இந்த வியவஹாரம், பண்டிதையாகிய கௌசிகி யோடு கூடிய மஹாராணி அவர்கள் முன்னிலையில் தீர்மானிக்கப்படட்டும்.

வி. மஹாராஜா அவர்கள் கூறியது நியாயமே.

க. ஹ மஹாராஜாவின் மனம்போல.

அ. மௌத்கல்யா, இங்கு நடந்ததைத் தெரிவித்து, மஹா ராணி அவர்களை பூஜ்யையான கௌசிகியுடன் இங்கு அழைத்துவா.

க. மஹாராஜாவின் ஆக்ஞைப்படி. [போய், பரிவ்ராஜிகை யுடன் தாரிணியை அழைத்து வருகிறான்.]—மஹாராணி அவர் கள் இவ்வழிவரவேண்டும்—இவ்வழி.

தா. பகவதி, கணதாச ஹரதத்தர்களுடைய பரீட்சையைப் பற்றித் தாங்கள் என்ன எண்ணுகிறீர்கள் ?

பரி உமது பட்சம் தோல்வியடையுமென்று நீர் பயப்பட வேண்டாம், கணதாசர் அவரது வைரியைப் பார்க்கினும் குறைந்தவரல்ல.—மஹாராஜா அவர்களுக்கு ஜெயமுண் டாகுக !

அ. பகவதி, தங்கள் பாதங்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

தா. பிராணநாதருக்கு ஜெயமுண்டாகுக !

அ. வாராய் அரசியே !—பகவதி, தாங்கள் ஆசனத்தில் எழுந்தருள வேண்டும்.

[எல்லோரும் முறைப்படி உட்காருகின்றனர்.]

பகவதி, கணதாச ஹரதத்தர்களுக்குள் கலைஞானத்தில் யார் உயர்ந்தவர் என்று ஒரு சம்வாதம் உண்டாயிருக் கிறபடியால், பூஜ்யரான தாங்கள் மத்யஸ்தராயிருந்து தீர்மானம் செய்யவேண்டும்.

பரி. தாங்கள் ஹேளனம் செய்யலாகாது; பட்டணம் பக்கலி லிருக்கையில் ரத்தினத்தை கிராமத்திற்குக்கொண்டு போய் பரீக்ஷிக்க வேண்டுமோ?

அ. அப்படியன்று அப்படியன்று, தாங்களோ சகலகலைகளு முணர்ந்த கௌசிகி, நானும் அரசியும் இவ்விருவர்களுக் குள் பட்சபாதமுடையவர்கள்.

க. மஹாராஜா அவர்கள் கூறியது உண்மையே, பூஜ்யரான தாங்கள் மத்யஸ்தராயிருந்து, எங்களிருவர்களுடைய குண தோஷங்களைத் தீர்மானம் செய்யவேண்டும்.

ஹ. ஆம், அது தான் நியாயம்.

அ. ஆயின், விவாதம் ஆரம்பிக்கப்படட்டும்.

பரி. நாட்டிய சாஸ்திரமானது பிரயோகத்தைப் பிரதான மாகவுடையது; ஆகவே வாக்கு விவாதத்தினுல் என்ன பிரயோஜனம்?—இதைப்பற்றி அரசி அவர்களுடைய அபிப்பிராயம் என்னவோ?

தா. என்னைக்கேட்கும் பட்சத்தில், இவ்விருவர்களுக்குள் இந்த விவாதமே என் மனதிற்குப் பிடிக்கவில்லை.

க. அரசியே, எனக்கு சமானமான வித்தையையுடைத் தாயிராத ஒருவனுல் என்னைத்தோற்கடிக்க முடியும் எனத்தாங்கள் எண்ணலாகாது.

வி. அரசியே, சண்டை ஆடுகளைச் சாப்பாடுபோட்டு வளர்ப் பானேன்? சம்பளம் கொடுப்பதற்காவது இவர்களைச் சண்டை செய்யவிட்டுப் பார்க்கவேண்டாமா? இல்லா விடின் என்னபிரயோஜனம்?

தா. நீ எப்பொழுதும் கலகப்பிரியனல்லவா?

வி. அப்படி அல்ல, மதம்பிடித்த இரண்டுயானைகள் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் ஒன்று தோல்வியடைந் தால் தான் சமாதானம் உண்டாகும்.

அ. பகவதி, தாங்கள், இவ்விருவரும் தங்கள் அங்கங்களால் அழகுற அபிநயித்ததைப் பார்த்திருக்கிறீர்களல்லவா ?

பரி. ஆம்—இருந்தால் என்ன?

அ. ஆயின் ஊர் ஜிதமடையும்படி இவர்கள் இன்னும் காண்பிக்கவேண்டிய தென்ன இருக்கிறது இப்பொழுது?

பரி. அதைப்பற்றித் தான் பேச விரும்புகிறேன்—ஒருவன் தான் கற்றகலையைத்தானாகக் காட்டுவதில் கெட்டிக்காரனாயிருக்கிறான், மற்றொருவன், அக்கலையை மற்றவர்களுக்குக் கற்பிப்பதில் கெட்டிக்காரனாயிருக்கிறான், யார் இவ்விரண்டிலும் தேர்ந்தவனாயிருக்கிறானோ அவனையே உபாத்தியாயர்களுள் தலைவனாக மதித்திடவேண்டும்.

வி. ஐயா, பகவதி அவர்கள் பகர்ந்ததை இருவரும் கேட்டீர்களல்லவா ? இதுதான் அதன் தாத்பர்யம்—உங்களது கற்பிக்கும் திறத்தை நீங்கள் காட்டினால்தான் ஒரு முடிவுக்கு வரமுடியும் இவ்விஷயத்தில்.

ஹ. எங்களுக்கு இது மிகவும் உசிதமே.

க. தேவி, அப்படியே இருக்கட்டும்.

தா. ஆயினும், மந்த புத்தியையுடைய ஒரு சிஷ்யன் ஆசாரியருடைய உபதேசத்தைத் தாழ்வுபடச்செய்தால், அது ஆசாரியனது தோஷமாகுமோ ?

அ. தேவி, அது இப்படி அர்த்தம் பண்ணப்படும்—புத்தியில்லாதவனை சிஷ்யனாக ஏற்றுக்கொள்ளுதல் ஆசாரியனுடைய புத்தி குறைவைக் காட்டுவதாம் என்று.

தா. [தனக்குள்] நான் என்ன செய்வது இப்பொழுது? பிராணநாதருடைய மனோரதத்தைப் பூர்த்திசெய்தலை ஒழிக்க

வேண்டும், அது அவரது உற்சாகத்தை அதிகப்படுத்தும். [உரக்க] கணதாசரே, பயனற்ற இக்காரியத்தை விடும்.

வி. மஹாராணியவர்கள் சரியாகச் சொன்னார்கள்·ஹே! கணதாசரே, சரஸ்வதிக்கு நைவேத்யம் செய்யும் பணியாரத்தை, நாட்யம் கற்பிக்கும் உபாத்தியாயன் என்று பெயர் வைத்துக் கொண்டு சாப்பிட்டுக்கொண்டிருக்கும் உமக்கு, சுலபமாய் உம்மைத் தோற்கடிக்கக் கூடிய விவாதத்தில் என்ன வேலை?

க. வாஸ்தவத்தில் மஹாராணியவர்களின் வார்த்தைக்கு அப்படித்தான் அர்த்தம் செய்யவேண்டியவரும்; இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லவேண்டிவந்திருக்கின்ற வார்த்தைகளைத்தயவு செய்து கேட்கவேண்டும்—ஒரு ஸ்தானத்தை அடைந்த பிறகு விவாதத்தினின்றும் பின் வாங்கி, வைரியின் நிந்தையை வாய்திறவாது சகிப்பவன், தன் கல்வியை வயிறுவளர்க்க உபயோகிக்கின்றவனாகிறான், அவன் கல்வியானது வாணிபப் பொருளாகி, அதில் வர்த்தகம் செய்கிறவனாகிறான்.

தா. உமது சிஷ்யை உம்மிடம் கொஞ்ச காலத்திற்கு முன்பு தானே ஒப்புவிக்கப்பட்டாள், ஆகவே உமது சிட்சையானது நன்றாகவேரூன்று முன் அதனை வெளிப்படுத்தலாகாது.

க. அக்காரணத்தின் பொருட்டே நான் இவ்வாறு நிர்ப்பந்திப்பது.

தா. ஆனால், உங்களுடைய கலைபயிலுவிக்கும் சாமர்த்தியத்தை பூஜ்யரான இந்த அம்மாள் முன்பாக மட்டும் காண்பியுங்கள்.

பரி. தேவி, இது நியாயமன்று, எல்லாமறிந்தவனாயிருந்த போதிலும் ஒருவனாக ஒரு வியவஹாரத்தில், ஒருமுடிவிற்கு வருவது, தவறுக்கு இடங்கொடுத்தாலும் கொடுக்கும்.

தா. [தனக்குள்] முண்டமே! நான் கண்ணைத்திறந்து கொண்டிருக்கும் பொழுதே என்னைக் கண்மூடியாக்கப் பார்க்கிறாய்!

[முகத்தைக் கோபத்துடன் திருப்பிக் கொள்கிறாள்; மஹாராஜா பரிவ்ராஜிகைக்குச் சைகை செய்கிறார்.]

பரி. சந்திரமுகி! காரணமின்றி உமது முகத்தை ஏன் மகாராஜா விடமிருந்து திருப்பிக்கொள்கிறீர்கள்? குலஸ்திரீகள் தம் கணவர் கைவசமாயிருந்த போதிலும், காரணம் ஏதேனும் இருந்தால்தான் அவர்கள் மீது கோபம் கொள்ளுவர்.

வி. ஏன்? காரணமாகத்தான் அப்படிச் செய்கிறார்கள், தன் பட்சம் தோல்வி யடையாதபடி பார்க்கவேண்டாமா?— [கணதாசருக்கு] மஹாராணியின் கோபம் எனும் போக்கினால் தாம் காப்பாற்றப் பட்டீர்கள்; எவ்வளவுதான் கலையில் தேர்ந்திருந்த போதிலும், எல்லோருக்கும் அதை மற்றவர்களுக்குக் கற்பிக்கும் திறம் இருக்க மாட்டாது.

க. தேவியவர்கள் கேட்கவேண்டும், இப்படித்தான் எல்லோரும் இதற்கு அர்த்தம் செய்வார்கள். இந்த விவாதத்தில், வித்தை பயிற்றுவிக்கும் என் திறத்தைக் காண்பிக்க விரும்பும் எனக்குத் தாங்கள் அவ்வாறு செய்ய விடைகொடுக்காவிட்டால், தங்களால் நான் கைவிடப் பட்டேன் என்றே கருதல்வேண்டும்.

[ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கிறார்.]

தா. [தனக்குள்] வேறு கதியில்லை! [உரக்க] ஆசாரியராகிய தாங்கள் தங்களுடைய சிஷ்யர்களைக் கட்டளையிடலாம்.

க. இதுவரையில் நான் சந்தேகப்பட்டது தவறாகும்— [அரசரிடம்] மஹாராணியவர்கள் எனக்கு உத்திரவு கொடுத்து விட்டார்கள், ஆகவே மஹாராஜா அவர்கள்

அபிநயசாஸ்திரத்தில் எந்த விஷயத்தில், கலைபயிற்றுவிக்கும் திறத்தை நான் காண்பிக்க வேண்டுமென்று தயவுசெய்து சொல்லவேண்டும்.

அ. பகவதி அவர்கள் எப்படி ஆஞ்ஞாபிக்கின்றார்களோ அப்படியே.

பரி. மஹாராணியவர்களின் மனதில் ஏதோ இருக்கின்றது, அதனால் நான் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

தா. சந்தேகமின்றி சொல்லவிரும்புவதைச் சொல்லும், என் பரிஜனங்கள்மீது எனக்குள்ள ஆஞ்ஞை குன்றவில்லையே.

அ. என்மீது கூட—என்று சேர்த்துக்கூறலாம்.

தா. பகவதி, பகரும் இனி.

பரி. அரசே, சதுஷ்பதம் எனும் கானத்தினின்றும் உத்பவித்த சலிதம் எனும் நாட்யம், நடிப்பது மிகவும் கடினமென வித்வான்கள் மதிக்கின்றனர். அதில் ஒரு பாகத்தை இவ்விருவர்களும் அவர்கள் சிஷ்யர்களுக்குக் கற்பித்ததைக் காண்போம். அதனால் அவர்கள் கல்வி பயிற்றுவிக்கும் திறத்தின் தாரதம்யம் அறியப்படும்.

க. ஹ. பகவதி அவர்கள் உத்திரவுபடி.

வி. இரண்டுபட்சத்தாரும் நாட்யசாலைக்குப் போங்கள்; அங்கே சங்கீதத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்துவிட்டு, எங்களுக்குச் சொல்லியனுப்புங்கள்—வேண்டாம், மிரதங்க சப்தமே எங்களை எழுந்திருக்கும் படிச்செய்யும்.

ஹ. அப்படியே. [எழுந்திருக்கிறார்.]

க. (தாரிணியை நோக்குகிறார்.)

தா. நீர் ஜெயிப்பீராக! தாங்கள் தோல்வி யடையவேண்டு மென்பது என் கோரிக்கையல்ல.

பரி. கொஞ்சம் இப்படிவாருங்கள்

க. ஹ. இதோ வந்துவிட்டோம்.

பரி. [ஒரு புறமாக அவர்களிடம்] நான் தீர்மானம் பண்ண வேண்டியிருக்கிறபடியால் இதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். உங்களுடைய இரண்டு சிஷ்யைகளும், அவர்கள் அபிநயம் பிடிக்கும் பொழுது அவர்களது அங்கங்கள் நன்றாய் விளங்குமாறு, மெல்லிய ஆடை அணிந்தவர்களாய் வரட்டும்

இருவரும். இதை எங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.

[போகிறார்கள்.]

தா. [அரசனிடம்] பிராணநாதர் ராஜகார்யங்கள் நடத்துவதில் இத்தனை கெட்டிக்காரராயிருந்தால், அவற்றின் பலன் அதிக சோபையுடையதாயிருக்கும்.

அ. மாதரசியே! இதை வேறாக நீ எண்ணலாகாது; இது என்னால் ஏற்படுத்தப்பட்டதன்று, சமானமான வித்தையுடையவர்கள் ஒருவருககொருவர் தங்கள் புகழைப் பற்றி பொறாமை கொள்வது சாதாரணம்.

[ரங்கததின் பின், மிரதங்க சப்தம் ஒலிக்கிறது.]

பரி. ஆ! சங்கீதம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

அ. தேவி, ரங்கத்தைப்போய்ச் சேரவோம்.

[எல்லோரும் எழுந்திருக்கின்றனர்.]

வி. [அரசனிடம் ஒரு புறமாய்] மெல்ல நடந்து போம், அவசரப்படாதீர், மஹாராணியவர்சள் உமது மனம்மாறியிருப்பதைக் கண்டுபிடிககப் போகிறார்கள்!

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

# இரண்டாவது அங்கம்

## முதற் காட்சி.

இடம் —நாட்டியசாலை.

அரசனும் தாரிணியும் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கின்றனர்.

அரசன் பக்கத்தில் விதூஷகன் உட்கார்ந்திருக்கிறான்.

பரிவ்ராஜிகை ஒருபுறமாக உட்கார்ந்திருக்கிறாள்.

பரிவாரங்கள் சூழ்ந்திருக்கின்றன.

அ. பகவதி, பூஜ்யரான இரண்டு உபாத்தியாயர்களுக்குள் யாருடைய சிட்சையை முதலில் பரீட்சிப்போம்.

பரி. இருவர்களுடைய கலைஞானமானது சமானமாயிருந்த போதிலும், கணதாசர் வயதில் பெரியவராகையால் அவரது பாண்டித்யமே முதலில் பரீட்சிக்கத்தக்கது.

அ. சரி, ஆனால், மௌத்கல்யா, பூஜ்யர்களான இரண்டு உபாத்யாயர்களுக்கும் இதை அறிவித்து, பிறகு உன் சொந்த வேலையைக் கவனிப்பாயாக.

க. மஹாராஜாவின் கட்டளைப்படி

[போய் கணதாசரை அழைத்துக் கொண்டு வருகிறான்.]

கண. அரசே, சர்மிஷ்டையினால் செய்யப்பட்ட கவனம் ஒன்றிருக்கிறது, அது நான்கு பாதங்களடங்கியது; அதன் தாளம் மத்தியம காலமாகும்; மஹாராஜா அவர்கள் அதன் நான்காவது பாதப்பிரயோகத்தை கவனமாய் தயவுசெய்து கவனிப்பீர்களாக.

அ. ஆசாரியரிடத்து எனக்குள்ள மரியாதையின் பொருட்டு அப்படியே கவனிக்கின்றேன்.

[கணதாசர் போகிறார்.]

அ. [ஒரு புறமாய் விதூஷகனிடம்] நண்பனே, நேபத்தியத்தில் மறைந்திருக்கும் அவளது ரூபத்தைக்காண விரும்பும் என்கண்கள், திரையைத் தூக்கிப்பார்க்க விரும்புவதே போல் காண்கின்றன.

வி. [ஒரு புறமாக அரசரிடம்] நீர்கண்ணுற் பருக விரும்பும் தேன் வருகிறது, ஆயினும் பக்கத்தில் ஈயிருக்கிறது, ஆகவே அஜாக்கிரதை யில்லாமல் பாரும்.

கணதாசர் மாளவிகையை அழைத்துக்கொண்டு வருகிறார்.

வி. [ஒரு புறமாக அரசனிடம்] மஹாராஜா கவனியும்; படத்தி லிருந்ததைப் பார்க்கிலும் இப்பாவையின் சௌந்தர்யம் குறைந்ததன்று.

அ. [ஒரு புறமாக விதூஷகனிடம்] படத்தில் மாத்திரம் இவளைப் பார்த்த பொழுது, நேரிற்காணுங்கால், படத்திற்குச் சமானமாகுமோ இவளது அழகென ஐயமுற்றேன்; இப் பொழுது நான் எண்ணுவது என்னெனின், இவளைப் படத்தில் வரைந்தவன், இவளது அழகை முற்றிலும் வரையச்சத்தியற்றவன், என்பதேயாம்.

கண. குழந்தாய், பயத்தை விட்டுத்திடசித்த முடையளாய் இரு.

[மாளவிகை ஒரு பாட்டைப்பாடி அதற்கு அபிநயம் பிடிக்கிறாள்]

வி. [ஒரு புறமாக] நண்பரே, மாளவிகை இந்த சதுஷ்பாதப் பாட்டினால், தன்னிருதயத்தை உமக்கு ஒப்புவித்திருப் பதை அழகாய் அறிவித்திருக்கிறாள்.

அ [ஒரு புறமாக] நண்பனே, என்னிருதயமும் எனக்கு அப் படித்தான் அறிவிக்கின்றது.

[மாளவிகை அபிநயம் முடிந்ததும், திரும்பிப்போக விரும்புவதே போல் தெரிவிக்கிறாள்.]

வி. பொறு அம்மா! ஒரு விஷயத்தை ஏதோ காரணத்தினால் மறந்து விட்டாய்; அதைப்பற்றி உன்னை நான் கேட்கவேண்டியிருக்கிறது.

கண. குழந்தாய், கொஞ்சம் நில், 'நான் கற்பித்ததில் குறையில்லை யென்று கூறப்பட்டபின் நீ போகலாம்.

[போகப்புறப்பட்ட மாளவிகை நிற்கின்றாள்.]

தா. கௌதமருடைய வார்த்தைகளைக் கூடத்தாங்கள் ஒரு பொருட்டாக கவனிக்கலாமோ?

கண. தேவி, அப்படிச் சொல்லலாகாது. மஹாராஜாவின் பக்கலில் எந்நேரமும் இருப்பதால், கௌதமரும் சூட்சுமதர்சியாகியிருக்கக்கூடும்; ஏனெனில், புத்திசாலிகளுடன் சம்சர்க்கத்தினால் மந்தபுத்தியுடையவனும் விவேகமடைகிறான், கலங்கிய ஜலமானது தேற்றாங் கொட்டையின் சம்பந்தத்தினால் களங்கம் நீங்கி தெளிவடைவதே போல்,—[விதூஷகனைப் பார்த்து] தாங்கள் சொல்ல வேண்டியதை நாங்கள் கேட்கட்டும்.

வி. முதலில் மத்யஸ்தருடைய அபிப்பிராயத்தைக்கேளும். பிறகு நாட்யத்தில் நான் கண்ட குறையைக் கூறுகிறேன்.

கண. பகவதி, கவனித்த தங்கள் அபிப்பிராயத்தை, குணமாயிருந்த போதிலும் தோஷமாயிருந்த போதிலும் கூற வேண்டும்.

பரி. நான் பார்த்தவரையில் ஒரு குறையுமில்லை. ஏனெனில், அங்கபாவங்களால் அர்த்தமானது அதிவிமரிசையாய் வெளிப்படுத்தப்பட்டது, பாதன்யாசமானது தாளத்திற்கு அணுவளவும் பேதமில்லாமல் அநுசரித்திருந்தது, அபிநயமானது ரசத்திற்கு முற்றிலும் அமைந்தபடியிருந்தது, அபிநயஹஸ்தங்கள் மிகவும் அழகு பொருந்

தியிருந்தன, பாவங்கள் மாறிமாறிவந்த போதிலும், விஷயத்தில் நமக்கிருந்த ஆர்வமானது கொஞ்சமேனும் குறையவில்லை.

கண. மஹாராஜா அவர்களின் அபிப்பிராயம் எப்படியோ?

அ. கணதாசரே, என்பட்சத்தில் குறைந்த அபிமான முடையவனாய் ஆகிவிட்டேன்.

கண. இன்று தான் உண்மையில் நான் நாட்யாசாரியனாகிறேன், நெருப்பிலிட்டு சுத்தம் பண்ணப்பட்டதே உத்தம பொன்னென மதிக்கப்படுவதே போல், கலைஞான முடைய சபையில் ஒப்புக்கொள்ளப்படுவதே சிலாக்கிய மானதெனக் கற்றறிந்தோரால் கூறப்பட்டிருக்கிறது.

தா. ஐயா, பரீட்சித்தவர்களுடைய மனதைத்திர்ப்தி செய்ததற்காக, உம்மை தான் கொண்டாட வேண்டிருக்கிறது.

கண. தேவியவர்களின் தயவினால் தான் இந்த அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது—[விதூஷகனைப் பார்த்து] கௌதமரே, தாங்கள் இனி தம்முடைய மனதிலிருப்பதைச் சொல்லலாம.

வி. சற்றகலையை அரங்கேற்றுபடி செய்யும் பொழுது, முதன்முதல் ஒரு பிராம்மணனுக்கு பூஜை செய்தே ஆரம்பிக்க வேண்டுமல்லவா? அதை நீங்கள் மறந்து விட்டீர்களென்று கூறுகிறேன்.

பரி. ஓ! நாட்டிய சாஸ்திரப்பிரயோகத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த மத்யஸ்தர் தாம்!

[எல்லோரும் நகைக்க, மாளவிகையும் புந்நகை புரிகிறாள்.]

அ. [தனக்குள்] முக்கியமாக நான் பார்க்க வேண்டியதைப் பார்த்தாயிற்று.

கண. பிராம்மணோத்தமரே, நேபத்யத்தில் நடக்கும் முதல் முதல் ஒத்திகை இதல்லவே, இல்லாவிடின் பூஜிக்கத் தகுந்த உமக்கு பூஜை செய்யாமலிருப் போமா?

வி. ஜலமற்ற மேகத்தினிடை தாகசாந்தி செய்து கொள்ள விரும்பும் மந்த புத்தியுடைய சாதகப் பட்சி நான்.

பரி. அப்படித்தான்.

வி. ஆனால் என்னைப் போன்ற மூடர்கள் திர்ப்தியடைந்த பண்டிதர்களுடைய மனதை அனுசரிக்க வேண்டியிருக் கிறது. பூஜ்யரான தாங்கள் நடித்தது நன்றாயிருந்த தெனத்தீர்மானித்தபடியால் பரிசாக மாளவிகைக்கு, இக்கைவளையைத் தருகிறேன்.

[அரசரது கையினின்றும் ஒரு வளையை வாங்குகிறான்.]

தா. பொறும்! ஏற்றத்தாழ்ச்சி அறியாத நீர் இதை எப்படி கொடுக்கப்பார்க்கிறீர்?

வி. இது மற்றவர்களுடைய சொத்தாதலால்.

தா. பூஜ்யரான கணதாசரே, உம்முடைய சிஷ்யை, தான் கற்றகல்வியைக்காண் பித்தாய தல்லவா?

கண. குழந்தாய், வா நாம்போவோம்.

[மாளவிகையை அழைத்துக்கொண்டு போகிறார்.]

வி. [ஒருபுறமாக அரசனிடம்] மஹாராஜா அவர்களுக்கு இவ் வளவு தான் என் புத்தியைக் கொண்டு உதவமுடியும்.

அ. [ஒருபுறமாக] நண்பனே, அங்ஙனம் உன் சக்தியைக் குறைத்து நீ ஒருகாலும் கூறலாகாது.

ஹரதத்தர் வருகிறார்.

ஹ. அரசே, இனி நான் கற்பித்த கலையைத்தாங்கள் காண் பதற்காக அனுக்கிரஹிக்க வேண்டும்.

அ. [தனக்குள்] நான் பார்க்கவேண்டியதைப் பார்த்தாயிற்று. [உரக்க] ஹரதத்தரே, அதைப்பார்ப்பதற்கு அதிக ஆவலாயிருக்கிறோம்.

ஹ. மஹாராஜாவின் அனுக்கிரகம்.

திரைக்குப்பின். மஹாராஜா! ஜெயவிஜயீபவ! மாத்யான்ன காலம் வந்து விட்டது!

வி. ஒகோ! பிராம்மணன் சாப்பிடவேண்டிய காலம் ஆய் விட்டது. உணவுகொள்ள வேண்டிய காலத்தை உண்ணாது கழித்தல் உடம்பிற்கு மிகவும் கெடுதி என்று வயித்தியர்கள் சொல்லுகிறார்கள். ஹரதத்தரே, தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள் இப்பொழுது?

ஹ. நான் பேசுவதற் கொன்றும் இடமில்லை

அ. ஆயின் நாளை உமது கலைபயிற்றுவிக்கும் சக்தியை நாங்கள் பார்க்கிறோம்; அதுவரையில் தாங்கள் சிரம பரிஹாரம் பண்ணிக்கொள்ளலாம்.

ஹ. மஹாராஜாவின் கட்டளைப்படி.

[ஹரதத்தர் போகிறார்.]

தா. பிராணநாதர் ஸ்நானவிதியை முடிக்கட்டும்.

வி. தேவி, பான போஜனத்திற்கு விரைவில் தக்கபடி ஏற்பாடு செய்யப்படட்டும்.

பரி. மஹாராஜாவுக்கு க்ஷேமமுண்டாகுக!

[அரசியுடனும் பரிவாரங்களுடனும் போகிறாள்.]

வி. ஹா! கவினில் மாத்திரமன்று கலைபயிற்சியிலும் மாளவிகை ஈடற்றவள்!

அ. நண்பனே! இயற்கையிலே அழகுவாய்ந்த அவளுக்கு இக்கலைஞானமும் கொடுத்த பிரம்மன், என்னை வெல்வதற்கு விஷமூட்டியபாணத்தை மன்மதன் கையிற்

கொடுத்ததாகும்.—நான் அதிகமாய்ச் சொல்வதேன்? நீ தான் என் தற்கால நிலையைக் கவனிக்க வேண்டும்.

வி. நீரும் என் தற்கால நிலையைக் கவனிக்கவேண்டும், அங் காடியிலிருக்கும் அடுப்பினைப் போல் என் வயிருனது பற்றி எரிகிறது பசியினுல்

அ. நீயும் காமனுல் தஹிக்கப்படுகின்ற உன் நண்பனுக்கு உதவவேண்டாமா?

வி. அப்படிச் செய்யநான் நிச்சயித்துவிட்டேன். ஆயினும் தாங்கள் அதிகமாய் 'அவசரப்படலாகாது.

அ. நண்பனே! நான் எப்படி அவசரப்படாமலிருக்கமுடி யும்? அழகிய கண்களையுடைய அவளை ஒருமுறைக் கண்டபின், அந்தப் புரத்திலுள்ள அழகிகள் ஒருவரை யும் கண்ணெடுத்துப் பார்க்கவும் என் மனம் ஒப்பவில் லையே!

[போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

# மூன்றும் அங்கம்

## முதற் காட்சி.

இடம்—அரண்மனை நந்தவனம்

அரசனும் விதூஷகனும் வருகிறார்கள்.

அ. என் காதலியைக் கட்டியணைக்கும் சுகத்தைப் பெறாததினால் என் தேகமானது குன்றிப்போக நியாயமுண்டு; ஒரு கணமும் அவளைக்காணாதபடியால் என் கண்கள் நீர் நிரம்ப நியாயமுண்டு; ஹிருதயமே, அம்மான் விழியாள் க்ஷணமும் நீங்காது உன்னிடம் குடிகொண்டபடியால், பேரானந்தம் உன் அருகிலேயேயிருக்க, பேதையே, ஏன் இவ்வாறு சஞ்சலப்படுகிறாய்!

வி. தைரியத்தை யெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி, இவ்வாறு தாங்கள் துக்கப்படுவதை ஒழியும்; மாளவிகையின் பிரிய சகியாகிய பகுளவளிகையைப் பார்த்து, தாங்கள் அவளுக்குத் தெரிவிக்க விரும்பிய சமாசாரத்தை அறிவித்திருக்கிறேன்.

அ. அதற்கென்ன சொன்னாள் அவள்?

வி. "இக்கட்டளையை எனக்கிட்டபடியால் மஹாராஜாவினால் நான் அனுக்கிரஹிக்கப் பட்டவளாயினேன், புதையலானது நாகத்தினால் காப்பாற்றப்படுவது போல், முன்பிருந்ததைவிட அதிக ஜாக்கிரதையாய், அப்பேதைப் பெண் மஹாராணியவர்களால் காப்பாற்றப் பட்டுவருகிறாள், ஆகையால் அவளை அரசர் அடைவது கஷ்டம், ஆயினும் அவர்களை ஒருங்குசேர்க்க இயன்ற அளவு முயல்கிறேன்" என்று உம்மிடம் சொல்லச்சொன்னாள்; தாங்கள் கோரிய பொருளைப் பெறும் விஷயத்தில் ஆரம்பப்பிரயத்னம் செய்தது ஆயிற்று, ஆகவே தாங்கள் தங்களுடைய மனதைத் தேற்றிக்கொள்ளவேண்டும்.

அ. நான் செய்ய வேண்டிய வேலைகளின் மீது செல்லாத மனதையுடைய நான், இப்பகற் காலத்தின் மிகுதியை எவ்விடம் கழிப்பது?

வி. ஏன்? ஐராவதி தேவியவர்கள் வசந்தருதுவின் ஆரம்பத்தைக் குறிக்கும் சில செவ்வசோகமலர்களைத் தம்மிடம் இன்று அனுப்பவில்லையா? வசந்தருதுவின் ஆரம்பத்தைக் கொண்டாடும் வியாஜத்தினால், நிபுணிகை மூலமாகப் பிராணநாதருடன் ஊஞ்சலில் உட்கார்ந்து விளையாடவிரும்புகிறேன், என்று சொல்லியனுப்பவில்லையா? தாங்கள் அவர்கள் இச்சையை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டீர்கள், ஆகவே இந்நந்தவனத்துட் புகுவோம், வாரும்.

அ. இது சரியானதல்ல.

வி. ஏன் அப்படி?

அ. நண்பனே, ஸ்திரீகள் சுபாவத்தில் மிகுந்த கூர்மையான புத்தியுடையவர்கள்; அவளுடன் விநோதமாய்க்காலம் கழிக்கும் பொழுதும், என்னுடைய ஹிருதயமானது வேறொருத்தியை நாடுகிறதென்பதை, உன் சிநேகிதையாகிய ஐராவதி அறியாதிருப்பாளா என்ன? ஆகவே அவளது வேண்டுகோளுக்கிணங்காதிருப்பதே நலமாம்.

வி. இதுவரையில் மிகுந்த மரியாதை பாராட்டிய அந்தப் புரஸ்திரீகளை இவ்வாறு அசட்டை செய்வது அனுசிதமாம்

அ. ஆனால், நந்தவனத்துள் நுழைவோம்வா.

வி. வாரும், இங்கு உட்கார்ந்து மனசந்துஷ்டியடையும்.

[ஒரு புறம் இருக்கும் கொடிவீட்டிற்குப் போய் உட்காருகின்றனர்.]

மற்றொரு புறமாக மாளவிகை வருகிறாள்.

மா. மஹாராஜாவின் மனதையறியாத நான், அவர்மீது காதல் கொண்டதற்காக என்னையே நான்வெறுக்க வேண்டியதாயிருக்கிறது. இவ்விஷயத்தை என் பிரியசகியிடம் எவ்வாறு நான் தெரிவிக்கக்கூடும்? கைகூடுதல் அசாத்தியமான இக்காதலினால், எத்தனைகாலம் நான் சஹிக்க முடியா இக்கஷ்டத்தை அநுபவிக்க வேண்டுமோ அறிகிலேன்!—நான் இப்பொழுது எங்கே போகிறேன்?— ஆம்! விதூஷகருடைய அஜாக்கிரதையினால் தான் ஊஞ்சலிலிருந்து விழுந்தபடியால், தன் பாதங்கள் நோயுற்றிருப்பதாயும், அதன் பொருட்டு, நீ சென்று பொன் அசோக விருட்சத்தின் விருப்பத்தை நிறைவேற்றி விட்டுவா, என்று தேவியவர்கள் ஆக்கியாபித்திருக்கிறார்கள் எனக்கு, அன்றியும் இன்னும் ஐந்து தினங்களுக்குள் அது புஷ்பிக்குமாயின் உன் மனதைச் சந்தோஷிப்பிக்கவல்ல—பரிசொன்றை—உனக்குத் தருகிறேன்— [பெருமூச்செறிந்து] என்றும் கூறியிருக்கிறார்கள். ஆகவே இக்கடனை நிறைவேற்ற வேண்டிய இடத்திற்கு முன்பு போகிறேன். என்பாதத்திற்கு அலங்காரம் செய்ய வேண்டிய பொருளை பகுளவளிகை கொண்டு என்னிடம் அணுகுமுன் கொஞ்சநேரமாவது, கண்ணீர்விட்டு என் கவலையைக் கொஞ்சம் ஆற்றுகிறேன்.

[துக்கிக்கிறாள்.]

வி. ஓகோ! கள்ளைக்குடித்து வெறுத்திருப்பவருக்கு கற்கண்டுவருகிறது!

அ. ஹா! என்ன அது?

வி. அதோ, அலங்காரம் முற்றிலும் முடியாதவளாய், தனியாக, ஏதோ கவலையுடன், மாளவிகை, வந்து நிற்கின்றாள்!

அ. என்ன? மாளவிகையா!

வி. சந்தேகமில்லை.

அ. இனி நான் உயிர் தரிக்கக்கூடும், தாகவிடாயடைந்த பிராயாணியின் மனமானது, நாரைப்பட்சிகளின் சப்தத்தினால் விருட்சங்கள் மூடிய ஆறு அருகிலிருக்கிறதென அறிந்து சந்தோஷமடைவதை போல், என்காதலி அருகிலிருக்கிறாள் என நீ கூறிட, சஞ்சலமடைந்த என் ஹிருதயம் சந்துஷ்டியடைகிறது,—எங்கே அவள் ?

வி. மரக்கூட்டத்தினின்றும் வெளிப்பட்டவளாய், இந்தப் பக்கம் தான் நோக்கிவருகிறாள்.

அ. நண்பனே ! நான் காண்கிறேன் அவளை—இதோ என் உயிரே உடல் உருக்கொண்டு வருகிறது ! நண்பனே, அவள்கன்னமானது வாடியிருந்த போதிலும், ஆபரணங்கள் அதிகமாய் அணியாவிட்டாலும், முன்பிருந்ததை விட இப்பொழுது முற்றிலும் அழகாய்த் தோற்றுகிறாள்—வசந்தருதுவில் புதிதாய்ப் புஷ்பித்த குந்த லதையைப்போல்.

வி. இவளும், தங்களைப்போல் மதனவியாதியினால் பிடிக்கப் பட்டிருக்கிறாள் போலும்.

அ. உனக்கென் மீதுள்ள அன்பானது உன்னை இவ்வாறு அறைந்திடச் செய்கிறது.

மா [ஒரு புறமாக] இந்த அசோக விருட்சமானது, தான் விரும்பியதை பெறாமல் வாடி புஷ்பிக்கா மலிருப்பதில், விரும்பியதைப் பெறாமல் வாடும் என்னை ஒத்திருக்கிறது; ஆகவே அதன் நிழலினால் குளிர்ந்திருக்கும் இச்சிலாதலத்தில் உட்கார்ந்து சற்றே என் துயரம் ஆறுகிறேன்.

வி. கேட்டீரா தாங்கள் ? விரும்பியத்தைப் பெறாமல் வாடுகிறதாகக்கூறினாள்.

அ. நீ உளகித்தது உண்மையென இதனாலும் நான் நிச்சயிக்கக்கூடவில்லை, ஏனெனில், விகசித்த இளந்தளிர்களினின்றும் சிறுதிவலைகளுடன் குரவகமலர்களின் மகரந்தத்தைச்சுமந்துவரும் மலையமாருதமானது ஒரு நிமித்தியமின்றி மனதில் விருப்பத்தை விளைக்கின்றதல்லவா,?

[மாளவிகை உட்காருகிறாள்.]

நண்பனே, இப்படிவா, இக்கொடியின் பின்னால் நாம் மறைந்திருப்போம்.

வி. ஐயோ! ஐராவதி தேவி தூரத்தில் வருகிறாற்போலிருக்கிறதே!

அ. புஷ்கரிணியைக் கண்டதும் மத்தகஜமானது முதலைக்கஞ்சுமோ ?

மா. [ஒரு புறமாக] ஹிருதயமே! ஆதாரம் ஒன்றுமில்லாதபடியால் இந்த அத்து மீறின ஆசையை விட்டொழி.—என்னையேன் இவ்வாறு வருத்துகிறாய் ?

வி. உமது சந்தேகமெல்லாம் நீங்குவதற்குக் காலம் வந்துவிட்டது, ரகசியமாய் இவளிடம உமதுகாதலைத் தெரிவிக்கும்படி நான் கேட்டுக்கொண்ட பகுளவளிகை அதோ வருகிறாள்.

அ. எனது வேண்டுகோளை அவள் ஞாபகம்வைத்திருக்கின்றாளோ என்னவோ ;

வி. என்ன! தங்களுடைய முக்கியமானகட்டளையை அந்தத் தாசிமகள் மறப்பாளா என்ன ? ஏன், நான்கூட அதை மறக்கவில்லையே.

பாதத்தில் அணியும் ஆபரணங்களுடன் பகுளவளிகை வருகிறாள்.

ப. சகி, க்ஷேமந்தானா ?

மா. ஹா! பகுளவளிகா! வாராய் சகி, உட்கார்.

ப. [உட்கார்ந்து] சகி தற்காலம் உனக்குத் தகுந்த வேலையே இட்டிருக்கிறார்கள் மஹாராணி அவர்கள், ஆகவே உனது ஒரு பாதத்தைக்கொடு, அதற்கு செஞ்சாந்தூட்டி இந்த நூபுரத்தை அணிவிக்கின்றேன்.

மா. [தனக்குள்] ஹிருதயமே! இந்த அதிர்ஷ்டம் கிடைத்ததென அதிகசந்தோஷப் பட்டுவிடாதே. இக்கஷ்டத்தினின்றும் நான் எவ்வாறு கடைத்தேறப் போகிறேன்? அந்தோ! இதுவே என் மரண அலங்காரமோ?

ப. என்ன யோசிக்கிறாய்? தேவியவர்கள் இப்பொன் அசோக விருட்சமானது புஷ்பிக்க வேண்டு மென்று மிகவும் விரும்புகிறார்கள்.

அ. இவ்வளவு ஆரம்பமும் இந்த அசோக விருட்சத்தைப் புஷ்ப்பிக்கக் செய்வதற்குத்தானா?

வி. என்ன! தேவியவர்கள் காரணமின்றி அந்தப்புரஸ்திரீகளுக்குரிய ஆபரணங்களை இவளுக்கு அணிவிக்கமாட்டார்கள் என்பதை அறியீரோ?

மா. [ஒரு பாதத்தை நீட்டி] சகி, இதற்காக என்னை மன்னிக்க வேண்டும்.

ப. ஏன், இதில் தவறில்லை, இதையும் என்சொந்த சரீரத்தைப் போல் பாவிக்கிறேன்.

[பாதத்தில் செஞ்சாந்து பூசுகிறாள்.]

அ. அந்தோ! அப்பாதத்தினால் விரும்பியதைப் பெறாமல் வாடிநிற்கும், அந்த அசோக விருட்சத்தையும் என்னையும், ஒன்றாய் உதைத்திடலாகாதா?

வி. நீர் தவறிழைக்கும் பொழுது அப்படியே தண்டிப்பாள் பயப்படாதீர்.

அ. நான் கோரியதைப் பெற்ற பிராமணன் வாக்கு பலித்திடுமாக!

மற்றொருபுறமாக, மதுபானத்தால் கலங்கிய ஐராவதியும், நிபுணிகையும் வருகிறார்கள்.

ஐ. அடி, நிபுணிகா, மதுபானமானது மாதர்களின் அழகினை அதிகப்படுத்துகிறதெனப் பன்முறை கேட்டிருக்கிறேன், இப்பழமொழியை வாஸ்தவமென நம்புகிறாயா ?

நி. இதன் முன் வெறும்பழமொழியாயிருந்தது, இன்று அது உண்மை மொழியாக ரூபிக்கப்பட்டது.

ஐ. இந்த அன்பு மொழியை அகலவிடு—என் பிராணநாதர் எனக்கு முன்பாக, தற்சமயம் ஊஞ்சல் வீட்டிற்குப் போயிருக்கிறார் என்று உனக்கெப்படித் தெரிந்தது ?

நி. வசந்தோற்சவத்தில் தனக்குச் சேரவேண்டிய பஹுமானங்களை விரும்பும் பூஜ்யரான கௌதமரால்.—வாருங்கள் விரைந்து போவோம்.

ஐ. அடி, மதுவினால் ஆக்கிரமிக்கப்பட்ட போதிலும் பிராணநாதரைப் பார்க்க வேண்டுமென்று என்னிருதயமானது என்னை உந்துகின்றது; ஆயினும் வேகமாய் அடி எடுத்து வைக்க முடியவில்லை என்னால்.

நி. இதோவந்து விட்டோம் ஊஞ்சல்கிரஹத்திற்கு.

ஐ. நிபுணிகா, எனது பிராணநாதரை அதில்காணோமே.

நி. தேவியவர்கள் ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டும். பரிஹாசத்தின்பொருட்டு தங்கள் பர்த்தா எங்காவது ஒளிந்திருக்கவேண்டும். நாம் அசோகவிருட்சத்தின் கீழிருக்கும் பிரியங்கு கொடிகளால் மூடப்பட்டிருக்கும் கல்லாசனத்திற்குப் போவோம்.

[அப்பக்கமாய், இருவரும் போகிறார்கள்.]

நி. ஓ! பார்த்தீர்களா அம்மா! மாம்பூவைத் தேடிக் கொண்டு போகும் பொழுது கட்டெறும் பினால் கடிக்கப்பட்டோம் !

ஐ. என்ன? நீ சொல்வது அர்த்தமாகவில்லை.

நி. அதோ, அசோகவிருட்சத்தின் நிழலில் மாளவிகையின் பாதத்திற்கு செஞ்சாந்து அணிவிக்கின்றாள் பகுளவளிகை.

ஐ. ஹா! இது மாளவிகை யிருக்கவேண்டிய இடமன்றே! இதனால் நீ என்ன ஊகிக்கின்றாய்?

நி. ஊஞ்சலிலிருந்து விழுந்ததினால் காயம்பட்ட பாதங்களையுடைய மஹாராணியவர்கள், அசோகவிருட்சத்தின் விருப்பத்தை நிறைவேற்ற மாளவிகையை இவ்வேலைக்கு நியமித்திருக்க வேண்டும் என எண்ணுகிறேன். இல்லாவிடில் தானணியும் நூபுரங்களை, தனது பாங்கியணியும் படி விட்டிருக்க மாட்டார்கள்.

ஐ. இது இவளுக்கும் பெரிய மரியாதையே!

நி. உமது பர்த்தாவை ஏன் தேடாமலிருக்கிறீர்கள்?

ஐ. தோழி, என் பாதங்கள் இவ்விடத்தை விட்டுப் பெயரேன் என்கின்றன; என் மனமானது ஏதோ சந்தேகப்படுகிறது. முதலில் இந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்கிறேன். [மாளவிகையைப் பார்த்து தனக்குள்] நான் சந்தேகப்பட்டது சரியாகி விட்டது.

ப. உன் பாதத்தில் வரைந்த செஞ்சாந்தின் கோலமானது உன் மனதிற்குத் திருப்தியா யிருக்கிறதா?

மா. என் பாதத்தி லிருப்பதினால் அதை நானே புகழ்வதற்கு லஜ்ஜையா யிருக்கிறது. கோலமிடும் இக்கலை யார் உனக்குக் கற்பித்தது?

ப. அரசர்தான் இதில் எனது உபாத்தியாயர்.

வி. [ஒருபுறமாக] ஆயின், குருவின் தட்சிணையாக அவளை இங்கே விரைவிற்கொண்டுவா.

மா. நீ கர்வப்படாதிருப்பது எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது.

ப. நான் கற்ற கலையைக் காண்பிக்கத் தகுந்த பாதங்கள் கிடைத்தபடியால் இன்று முதல் நான் கர்வப்படுவேன். —சகி, உன் பாதம் ஒன்றினுக்கு செஞ்சாந்து பூசியாயது. அதனை உலரச்செய்யும் பொருட்டு வாயினால் கொஞ்சம் ஊத வேண்டியதுதான்— அதுவும் வேண்டுவதில்லை— இவ்விடம் காற்று அதிகமா யடிக்கிறது. சகி, சிவந்ததாமரையைப் போல் சிருங்காரமாயிருக்கிறது உனது பாதம்; நிச்சயமாய் மஹாராஜாவின் மடிமீது நீ இருப்பாயாக!

[ஐராவதி நிபுணிகையின் முகத்தை நோக்குகிறாள்.]

அ. [ஒருபுறமாக] அதுதான் என் கோரிக்கையும்!

மா. ஆ! சகி!— சொல்லக்கூடாத வார்த்தையை நீ சொல்லுகிறாய்.

ப. சொல்ல வேண்டிய வார்த்தையைத் தான் நான் சொல்லுகிறேன்.

மா. என்மீது பிரியம் உடையவளல்லவா நீ?

ப. நான் மாத்திரமா?

மா. இன்னும்யார் என்மீது பிரியம் கொண்டிருப்பது?

ப. குணமிருக்கு மிடத்து பிரியம் கொள்பவரன்றோ மஹாராஜா?

மா. நீ பொய் உரைக்கின்றாய், அந்தபாக்கியம் எனக்குக் கிட்டாது.

ப. வாஸ்தவத்தில் அது உன்னுடையதல்ல! வெளுத்து மெலிந்திருக்கும் மஹாராஜாவின் அங்கங்களில் அது காணப்படுகிறது?

நி. [ஒரு புறமாக] முன்பே படித்துவைத்திருந்தது போல் பதில் உரைக்கின்றாள் பட்டி முண்டை!

ப காதலானது காதலினால் பரீட்சிக்கப்படவேண்டும் என்னும் பழமொழியை மெய்ப்படுத்து.

மா. இது என்ன உன்மனம் போனபடியெல்லாம் பேசுகிறாயே ?

ப. அப்படி அல்ல, இவைகாதலினால் கவின்பெறும் மஹாராஜாவின் கனிவாம் வார்த்தைகள்; இவை என்வாய் மூலமாக வெளிவருகின்றன.

மா. அந்தோ ! மஹாராணியவர்களை நினைக்கும் பொழுது என்மனமானது சஞ்சலப்படுகிறது.

ப பேதையே ! வசந்தத்தின் பலனெல்லாம் திரண்டுதித்ததனைய மாந்தளிரை, வண்டுமொய்க்கின்றதெனை, காதில் சூடாதிருப்பார்களோ ?

மா. இதனால் துன்பம் ஏதேனும் நேரிடில் நீதான் துணையாக வேண்டும் கடைசிவரையில்.

ப. கசக்கக்கசக்க சுகந்தம் அதிகப்படும் பகுளவளிகையல்லவா நான்!

அ. [ஒரு புறமாக] நன்றாய்ச் சொன்னாய் பகுளவளிகை !

ஐ [ஒருபுறமாக] பார்த்தாயா தோழி! மாளவிகையின் மனத்தை இவ்வாறு திருப்பியவள் பகுளவளிகைதான்.

நி. ஆம் அரசியே ! அவள் கற்பனையானது காதலில்லாவிடத்தும் காதலையுண்டு பண்ணும் !

ஐ. ஒரு காரணமுமின்றி என் மனமானது சந்தேகப்படவில்லை. இதனுண்மையை இன்னும் நன்றாய் அறிந்தவுடன், நான் செய்ய வேண்டியதைத் தீர்மானிக்கிறேன்.

ப. இதோ உனது மற்றொரு பாதத்திற்கும் செஞ்சாந்து அணிந்தாயது, இப்பொழுது அவ்விரண்டிற்கும் நூபுரங்களை அணிவிக்கின்றேன்.— சகி, எழுந்திருந்து மஹாராணி உனக்கிட்ட கட்டளைப்படி, இவ்வசோக மரம் புஷ்பிக்கச் செய்ய வேண்டிய உன்கடமையை நிறைவேற்று.

ஐ. [ஒருபுறமாக] மஹாராணியின் கட்டளையைக் கேட்டாயிற்று—அது நிறைவேற்றப்படட்டும்.

ப அனுராகத்துடன் அனுபோகத்திற்கு யோக்யமாய் இதோ—உன் எதிரிலிருக்கிறது —

மா. யார் ? மஹாராஜாவா?

ப. இல்லை இல்லை, மஹாராஜவன்று, இவ்வசோகவிருட்சத்தின் கிளையினின்றும் தொங்கிக் கொண்டிருக்கும் இளந்தளிர்க்கொத்து, அதை உன் காதில் அணிந்துக்கொள்.

வி. [ஒருபுறமாக] கேட்டீரா தாங்கள் ?

அ. காதலனுக்கு இவ்வளவு போதும்.

[மாளவிகை அசோகத்துளிரைப் பறித்து காதில் அணிந்து பிறகு தன் காலால் அம்மரத்தை ஸ்பர்சிக்கிறாள்.]

மா. நமது கோரிக்கை நிறை வேறுமென எண்ணுகிறாயா?

ப. சகி, அல்லாவிட்டால் உனதுகுற்றம் ஆகாது, உன்பாதத்தினால் தீண்டப்படும் பாக்கியத்தைப் பெற்றும் இவ்வசோகு புஷ்பிக்காதிருந்தால் அது புண்ணியம்பண்ணவில்லை யென்றே யெண்ணவேண்டும்.

அ. [ஒருபுறமாக] நண்பனே ! இதுதான் பேசுதற்கு நல்ல சமயம். ஆகவே நான் அவள் எதிரிற் போகிறேன்.

வி. - வாரும் ஆனால், நான் அவளைப்பரிஹாசம் செய்கிறேன்.

[இருவருமாக மாளவிகையின் எதிரிற்போகின்றனர்.]

நி. [ஒருபுறமாக] தேவி, பாருங்கள் உமது பிராணநாதர் வருகிறார்.

ஐ. என்மனதில் இவ்வாறு நடக்குமென்று முன்பே பட்டது.

வி. பகவதி, எனது நண்பராகிய மஹாராஜாவுக்குப் பிரியமான இந்தவசோகவிருட்சத்தை உனது இடது காலால் உதைத்திடத் தகுமா?

மா ப. ஹா!— மஹாராஜா அவர்கள்!

வி. பகுளவளிகா, அவளது எண்ணத்தை அறிந்தவளாயினும் மரியாதையில்லாத இக்காரியம் செய்யாதபடி அவளை ஏன் தடுக்கவில்லை ?

நி. [ஒருபுறமாக] தேவி, பூஜ்யாரன கௌதமர் என்ன வேலை ஆரம்பித்திருக்கிறார்பாரும்.

ஐ. இந்தக்கேடுகெட்ட பிராம்மணனுக்கு ஜீவனம் ஏது இல்லாவிட்டால் !

ப. அரசே ! இவ்விஷயத்தில் மஹாராணியின் கட்டளையை நிறைவேற்றுகின்றாள் என் தோழி, மற்றவர்களுடைய ஆக்கினைக் குட்பட்டு இத்தவறு இழைத்தபடியால் மஹாராஜா அவர்கள் மன்னிக்க வேண்டும்.

[மாளவிகை அரசன் காலில் விழச்செய்து தானும் அப்படியே விழுகிறாள்.]

அ. இப்படியானால், உன்மீது தவறில்லை--நங்காய், எழுந்திரு.

[மாளவிகையின் கரத்தைப் பற்றி எழுந்திருக்கச் செய்கிறார்.]

வி. நியாயம்தான், இவ்விஷயத்தில் மஹாராணியின் கட்டளைக்கு மரியாதை செய்யவேண்டியதே.

அ. விலாஸினி, இளந்துளிர் போன்ற உனது இடது பாத மானது, இம்மரத்தின் அடியைத் தாக்கியதால் நோயுற வில்லையெனக் கோருகிறேன்.

ஐ. [ஒரு புறமாக] ஹா! பிராணநாதருடைய ஹிருதயமானது வெண்ணெயைப்போல் உருகிப்போகிறது பாவம்!

மா. வாராய் பகுளவளிகா, மஹாராணியிடம் போய் அவர் கள் கட்டளையை நிறைவேற்றினதாகத் தெரிவிப்போம்.

ப. ஆயின், போகவிடையளிக்கும்படி மஹாராஜாவைக் கேள்.

அ. நங்காய், போவாய் பொறு; முதலில், தக்கசமயம் வாய்ந்த எனது வேண்டுகோளைக்கேட்பாயாக.

ப. கவனமாய்க்கேள்—மஹாராஜா அவர்கள் ஆக்ஞை செய் யலாம்

அ. அநேக காலமாக ஆநந்தம் எனும் புஷ்பத்தை அடை யாத இவனை, அமிர்தமாகிய உனது ஸ்பர்சத்தினால், ஆநந்தத்தில் மூழ்கச் செய்து, உன்னையன்றி வேறொரு வரையும் விரும்பாத இவனது ஆர்வத்தைப் பூர்த்தி செய் வாயாக!

ஐ. [திடீரென்று அவர்கள் முன் போய்] பூர்த்திசெய்யடி! பூர்த்தி செய்! அசோகவிருட்சமானது புஷ்பத்தைமாத்திரம் தரும்—இவரோ, புஷ்பத்தையும் கொடுப்பார், பலத்தை யும் கொடுப்பார்!

[ஐராவதியைக் கண்டு எல்லோரும் திகைத்து நிற்கின்றனர்.]

அ. [ஒருபுறமாக] நண்பனே! இப்பொழுது என்ன செய்வது?

வி. வேறென்ன செய்வது? காலின் பலத்தைக் காண்பிக்க வேண்டியது தான்.

ஐ. பகுளவளிகா! நல்ல வேலைசெய்ய ஆரம்பித்தாய் மாளவிகா! பிராணநாதருடைய பிரார்த்தனையைச் சபல மாக்கு!

மா. தேவி, என்னை மன்னிக்கவேண்டும்—மஹாராஜாவின் அன் பிற்குப் பாத்திரமாவதற்கு அடியாள் யார்?

[பகுளவளிகையுடன் விரைந்து போகிறாள்.]

ஐ. அந்தோ! ஆடவர்கள் என்ன நம்பத்தகாதவர்கள்!—உமது மோசவார்த்தைகளை உண்மையென நம்பின வளாய், வேடனது வாத்தியத்தினால் வலிக்கப்படும் மானைப்போல் சங்கையில்லாதவளாகி, இதை அறியாமற் போனேனே!

வி. [ஒரு புறமாக அரசனுக்கு] ஏதாவதுபதில் சொல்லும், கையும் களவுமாய்ப் பிடிக்கப்பட்டகள்வன், கன்னம் வைக்கும் வித்தையைப் பழகிப்பார்ப்பதாகக் கூறவேண் டியிருக்கிறதல்லவா?

அ. சுந்தரி, மாளவிகையால் எனக்கென்ன பிரயோஜனம்? நீ வருவதற்குத் தாமசமானபடியினால், ஏதோ விநோத மாகக்காலம் கழித்தேன்.

ஐ. உங்கள் வார்த்தையை நம்பவேண்டும்! விநோதமாய்க் காலம் கழிப்பதற்கு இப்படிப்பட்ட வஸ்து ஒன்று பிராணநாதருக்குக் கிடைத்ததென அறியாமற் போ னேனே! இல்லாவிட்டால் அபாக்கியசாலியாகிய நான் இடையூறாக வந்திருக்கமாட்டேன்!

வி. மஹாராஜா அவர்கள் ஏதோதவறி நடந்ததாகத் தாங் கள் எண்ணலாகாது. மஹாராணியின் பாங்கிகள் அகஸ் மாத்தாய் சந்தித்தால் அவர்களுடன் வேடிக்கையாய்ப் பேசுவது ஒரு அபராதமானால், தாங்கள் தண்டனை விதிக்கலாம், நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதே!

ஐ. சரி, அப்படியே வேடிக்கையாய்ப் பேசுவது நடக்கட்டும்!—அதன் பொருட்டு நான் ஆயாசப்படுவானேன்?

[கோபத்துடன் போகப்புறப்படுகிறாள்.]

அ. தேவி, கொஞ்சம் தயவுசெய், [ஐராவதியின் மேகலையானது காலில் சிக்கிய போதிலும் கவனியாது நடக்கிறாள்]—சுந்தரி, உன்மீது பிரியமுடைய என்னை இவ்வாறு உபேட்சை செய்வது, உனக்கழகல்ல.

ஐ. கள்ளரே! உமது வார்த்தையை இனி நம்பவேமாட்டேன்!

அ. கண்மணி, கள்ளன் என்றழைத்த உனது கோபமானது உன்னிடம் அதிக பரிசயமுள்ள என் மீது காட்டப் படட்டும்; ஆயினும், கோப முடையாளே, உனது பாதத்தில் வீழ்ந்து உன்னை வேண்டும், இம்மேகலையின் மீதுள்ள கோபத்தை நீ விட்டுவிடவேண்டாமா?

ஐ. இந்தப்பாழும் மேகலையும் உம்முடைய பட்சம் சேர்கிறதே!

[அதை எடுத்து அதனால் அரசரை அடிக்கப் போய்த்தடுத்துக்கொள்ளுகிறாள்.]

அ. குடிலகேசி! தவறு இழைத்த எனக்கு விதித்த தண்டனையை ஏன் தடுத்துக்கொள்கிறாய்? உனது விலாசமானது விர்த்தியடைகின்றது, இருந்தும் உனது அடிமையின் மீது உன் கோபமானது குறையவில்லை!—இது செய்ய எனக்கு உத்திரவு உண்டல்லவா?

[பாதத்தில் விழுகிறார்.]

ஐ. அவைகளின் ஸ்பர்சத்தினால் உமக்கு ஆநந்தம் அளிக்கவல்ல மாளவிகையின் பாதங்கள் அல்ல இவை!

[தன் பாங்கியுடன் விரைந்து போகிறாள்.]

வி. எழுந்திரும், நீர் அனுக்கிரஹிக்கப் பட்டீர்.

அ. [எழுந்து] என் பிரியை போய்விட்டாளா என்ன?

வி. நண்பனே, இவ்வாறு குற்றமுள்ள நடவடிக்கையோடு கோபம் தணியாது சென்றது, நம்முடைய அதிர்ஷ்டம் தான்; அங்காரகக்கிரஹம் வக்கரிப்பது போல் அவர்கள் திரும்பிவருமுன், நாம் இவ்விடம்விட்டு விரைந்து போவோம் வாரும்.

[அரசரை அழைத்துப் போகிறான் விரைவில்.]

காட்சி முடிகிறது.

## நான்காம் அங்கம்

### முதற் காட்சி.

இடம்—அரண்மனையில் ஓர் அறை.

அரசர் ஒரு புறமாக உலாவிக்கொண்டிருக்கிறார்.

அ. நண்பா, கௌதமா?

பிரதீஹாரி வருகிறாள்.

பி. மஹாராஜாவுக்கு ஜெயமுண்டாகுக!—கௌதமர் இங்கு இல்லை.

அ. [தனக்குள்] ஆம் ஆம், மாளவிகையைப்பற்றி அறிந்துவர அனுப்பினேன் அவனை.

விதூஷகன் வருகிறான்.

வி. மஹாராஜாவுக்கு க்ஷேமமுண்டாகுக!

அ. ஜெயசேனே, நோயுள்ள பாதத்துடன் தேவிதாரிணி எங்கிருக்கிறார்கள், எப்படிக்காலம் கழிக்கிறார்கள், என்று பார்த்துவா.

பி. மஹாராஜாவின் கட்டளைப்படி.

[போகிறாள்.]

அ. உனது தோழி மாளவிகை எப்படி யிருக்கிறாள் ?

வி. பூனையின் வாயிலகப்பட்ட பெண் குயிலைப்போல்.

அ. ஏன் அப்படி ?

வி. பண்டங்கள் வைக்கும் பாதாளக் கிரஹத்தில், பொறாமையுள்ள மஹாராணியவர்களால், யமன் வாயிலடைப்பது போல், அடைத்து வைக்கப்பட்டிருக்கிறாள்.

அ. நான் அவளைச் சந்தித்தேன் என்பதை அறிந்ததினாலா ?

வி. வேறென்ன ?

அ. மஹாராணியை இவ்வாறு என்மீது கோபங் கொள்ளும் படிச் செய்த, எனக்கு விரோதமானவர்கள் யார் ?

வி. பரிவ்ராஜிகை நேற்று என்னிடம் கூறியதைச் சொல்கிறேன்—கேளும் நீர்—காலில் அதிக நோயுடன் வருந்திக் கொண்டிருந்த மஹாராணி க்ஷேமத்தைக் கேட்க ஐராவதிதேவி போயிருந்தார்களாம்.

அ. உம்—பிறகு ?

வி. அப்பொழுது அவர்களை மஹாராணி, மஹாராஜாவின் பிராணநாயகியாகிய நீ மஹாராஜாவைப் பார்த்தாயா எனக் கேட்க, அவர்கள், மஹாராஜாவின் பிராணநாயகி எனும் பட்டம், உனது பாங்கிக்கு ஆகி விட்டதே, அதை அறியாது என்னை இவ்வாறு பரிஹாசம் பண்ணலாமா, எனக்கேட்டார்களாம—பிறகு அதிகமாய் வற்புறுத்தப் பட்டு, நீர் தவறிழைத்ததை தாரிணிதேவியிடம் முற்றிலும் தெரிவித்து விட்டார்களாம்.

அ. அந்தோ ! அவள் ஆரூத கோபமுடையவள் ஆயிற்றே!— பிறகு என்ன நடந்தது சொல்.

வி. வேறென்ன நடக்கும்? சூர்யகாந்தி கண்ணுக்குப்படாத பாதாளகிரஹத்தில் காலில் விலங்கு பூட்டப்பட்டு, மாளவிகையும் பகுளவளிகையும் நாக கன்னிகைகளைப்போல் அடைக்கப்பட்டிருக்கின்றனர்.

அ அந்தோ ! கஷ்டம்' கஷ்டம்!—அவர்கள் வெளியே தப்புவதற்கு ஏதாவது வழியுண்டோ?

வி. எப்படி உண்டாகும்? பண்டங்கள் வைக்கும் அக்கிரஹத்திற்குக் காவலாயிருக்கும் மாதவிகை, "அந்தப்பாழும் மாளவிகையையும் பகுளவளிகையையும், என்னுடைய கணையாழியைக் கண்டாலொழிய, நீ சிறையினின்றும் விடுவிக்கலாகாது" என மஹாராணியவர்களால் கட்டளையிடப்பட்டிருக்கிறாள்.

அ. நண்பனே, இதற்கென்ன செய்வது ?

வி. [யோசித்து] இதற்கு ஒரு உபாயம் இருக்கிறது.

அ. என்ன அது?

வி. யாராவது மறைந்திருந்து கேட்கப்போகிறார்கள்—உமது காதில் கூறுகிறேன்—இந்தப் பிரகாரம்-[ரகஸ்யமாய் கூறுகிறான்.]

அ. நல்ல யுக்தி யோசித்திருக்கிறாய்! அது சித்தியாகும்படியான மார்க்கத்தைத் தேடு.

பிரதீஹாரி வருகிறாள்.

பி. மஹாராஜா, காற்றுள்ள விடத்தில் வைக்கப்பட்ட கட்டிலின்மீது சயனித்தவர்களாய், பாங்கிகள் தங்கள் கையில் அவர்கள் பாதத்தைத் தாங்கி, சிவந்த சந்தனத்தை

முற்றிலும் தேய்க்க, மஹாராணியவர்கள் பூஜ்யையான பரிவ்ராஜிகை அவர்களின் கதைகளைக் கேட்டுக்கொண்டு காலம் கழிக்கின்றனர்.

அ. ஆயின் இதுதான் தக்க சமயம் அவர்களை நான் பார்க்க.

வி. மஹாராஜா அவர்கள் போகலாம்; நானும் மஹாராணி அவர்களைப் பார்ப்பதற்கு ஏதாவது காணிக்கை கையி லெடுத்துக் கொண்டு வருகிறேன்.

அ. அதைப்பற்றி ஜெயசேனையிடம் அறிவித்து விட்டுப் புறப்படு.

வி. அப்படியே—அம்மா, இதுதான்—

[அவள் காதோடு ஏதோ சொல்லுகிறான்.]

அ. ஜெயசேனை, தேவியவர்கள் காற்றோட்டமாய்ப் படுத் திருக்குமிடத்திற்கு வழிகாட்டு.

பி. இவ்வழி, மஹாராஜா.

[மஹாராஜாவை அழைத்துச் செல்கிறாள்; விதூஷகன் மற்றொரு புறமாகப் போகிறான்.]

**காட்சி முடிகிறது.**

## இரண்டாம் காட்சி.

இடம்:—அரண்மனையில் ஒரு முற்றம்
ஒரு கட்டிலின்மீது **தாரிணி** படுத்திருக்கிறாள்.
**பரிவ்ராஜிகை** பக்கலில் உட்கார்ந்திருக்கிறாள்.
**பாங்கிகள்** இருபக்கமும் நிற்கின்றனர்.

தா. பகவதி, கதையின் வஸ்து மிகவும் ரமணீயமா யிருக்கிறது—பிறகு?

ப. இங்கிருந்து மற்றக் கதையை—பிறகு சொல்கிறேன்—அதோ மஹாராஜா அவர்கள் வருகிறார்.

தா. ஹா! என் பிராணநாதா! [எழுந்திருக்கப் பார்க்கிறாள்]

அ. போதும், போதும், இந்த உபசாரத்தினால் உனக்குக் கஷ்டம் வேண்டாம். மதுரமொழியாளே, நூபுரங்களை விட்டு எப்பொழுதும் பிரிந்திராத, சதாகாலம பொற் பீடத்தின்மீது வீற்றிருக்கும் வழக்கமுள்ள, நோயுள்ள உன் பாதங்களுக்கு நீ கஷ்டம் கொடுத்து, எனக்கும் அதனால் கஷ்டம் கொடுக்கலாகாது.

தா. மஹாராஜாவுக்கு ஜெயமுண்டாகுக!

ப. மஹாராஜாவுக்கு க்ஷேமமுண்டாகுக!

அ. [பரிவ்ராஜிகையை வணங்கி விட்டு, மஹாராணியின் பக்கலில் உட்கார்ந்து] தேவி, உன் கால் நோயானது கொஞ்சம் குறைந்திருக்கிறதா?

தா. கொஞ்சம் சௌகர்யமாயிருக்கிறது.

**விதூஷகன்** கட்டை விரலை பூணு நூலினால் கட்டிக்கொண்டு, பயந்தவனாய் ஓடி வருகிறான்.

வி. மஹாராஜா! காப்பாற்றும்! காப்பாற்றும் என்னை! ஒரு பாம்பு என்னைக் கடித்து விட்டது!

அ. அந்தோ! அந்தோ! எங்கே திரிந்து கொண்டிருந்தாய் கவனியாது?

வி. மஹாராணியைக் காண விரும்பி, வழக்கப்பிரகாரம், புஷ்பம் பறிக்க பிரமத வனத்திற்குப் போனேன்—

தா. அந்தோ! அந்தோ! பிராம்மணனுடைய உயிருக்கு ஹானி வந்ததற்கு நான் காரணமாயினேனே !

வி. அங்கே, அசோக மலரின் கொத்து ஒன்றைப் பறிக்க என் கையை நீட்டியபொழுது, யமன் ஒரு பாம்பின் ரூபமாகி, என் கையைக் கடித்து விட்டான்—அங்கிருந்த ஒரு பொந்திலிருந்து வந்து—இதோ பாரும் இரண்டு பற்குறிகள்.

ப. அப்படியாயின் கடித்த பாகத்தை அறுத்து எடுத்து விட வேண்டியது முதற் சிகிச்சையெனச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே அது முதலிற் செய்யப் படட்டும்.

அ. இது விஷவைத்தியர்கள் பார்க்க வேண்டிய காரியம்; ஜெயசேனா, துருவசித்தியை உடனே அழைத்துவரச் சொல்.

பி. மஹாராஜாவின் கட்டளைப்படி

[விரைந்து போகிறாள்.]

வி. அந்தோ! பாரும் யமன் வந்து விட்டான் என்னைக் கொண்டு போக!

அ. பயப்படாதே! கடித்தது ஒரு வேளை விஷப்பாம்பா யில்லாதிருக்கலாம்.

வி. எப்படி நான் பயப்படாதிருப்பது! என் கைகால்களெல்லாம் உதறுகின்றனவே!

தா. அந்தோ! அசுபமாய் முடியும்போலிருக்கிறதே! பிராம்மணனைத் தாங்குங்கள்!

[பாங்கிகள் அங்ஙனமே செய்கின்றனர்.]

வி. நண்பரே!—சிறு வயது முதல் உம்முடைய சிநேகிதனாய் இருந்தேன்—அதை உத்தேசித்து பிள்ளையற்ற என்

தாயாருடைய யோக க்ஷேமத்தைத் தாங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அ. பயப்படாதே! மனதை தைரியம் பண்ணிக்கொள். வைத்தியர் உன்னைச் சீக்கிரம சுவஸ்தப்படுத்துவார்.

ஜெயசேனை மறுபடி வருகிறாள்.

ஜெ. மஹாராஜா, துருவ சித்தியை நான் அழைத்தபொழுது, கௌதமரைத் தன்னிடம் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார்.

அ. ஆனால், இவனை ஆணங்கிகளைக் கொண்டு தூக்கிக்கொண்டுப் போய் அந்த வயித்தியரிடம் விடுங்கள்.

ஜெ. மஹாராஜாவின் கட்டளைப்படி.

வி. மஹாராணி, நான் பிழைக்கமாட்டேனோ பிழைப்பேனோ —தங்களிடத்தில் நான் சேவித்தபொழுது, ஏதாவது குற்றங்கள் இழைத்திருந்தால் அவற்றையெல்லாம் மன்னித்துவிடும்!

தா. தீர்க்காயுஷுடன் இருப்பாயாக!

[பிரதீஹாரி விதூஷகனை அழைத்துப் போகிறாள்.]

அ. சுபாவத்தில் பயங்காளிப் பிராம்மணன், உண்மையான பெயரையுடைய துருவசித்தியின் சிகிற்சையிலும் அவனுக்கு நம்பிக்கையில்லை போலும்!

பிரதீஹாரி மறுபடி வருகிறாள்.

பி. மஹாராஜாவுக்கு ஜெய முண்டாகுக!—உதகுப்பவிதானம் எனும் சிகிச்சைக்கு, சர்ப்ப முத்திரையையுடைய ஏதாவதொன்றைக் கற்பிக்கவேண்டும் என்று விஞ்ஞாபனம் பண்ணுகிறார், ஆகவே அப்படிப்பட்ட பொருளை உடனே தேடிக்கொண்டு வரச் சொன்னார்.

தா. இதோ சர்ப்ப முத்திரையையுடைய மோதிரம் ஒன்று என்னிடம் இருக்கிறது—இந்தா, வேலை முடிந்தவுடன் இதை என்னிடம் கொண்டு வந்து கொடு.

[அதைக் கொடுக்கிறாள்.]

அ. வேலை சரியாக முடிந்தவுடன் எனக்கு சமாசாரம் கொண்டுவா.

பி. மஹாராஜாவின் ஆக்ஞைப்படியே. [போகிறாள்.]

ப. கௌதமர் விஷத்தினின்றும் விடுவிக்கப்பட்டார் என்று எனக்குள் ஏதோ சொல்கிறது.

அ. அங்ஙனமே இருக்குமாக!

தா. நானும் அங்ஙனமே கோருகிறேன்—என் மீது பழியில்லாதிருக்கும் பொருட்டு

பிரதீஹாரி மறுபடி வருகிறாள்.

ம-பி. மந்திரி வாஹதகர், அநேக ராஜாங்க விஷயங்களைப் பற்றி மஹாராஜாவுடன் நான் பேசவேண்டியிருக்கிறது ஆகவே அவரைப் பார்க்கக் கூடுமா, என்று கேட்டுவரச் சொன்னார்.

தா. பிராணநாதா, ராஜாங்க வேலையைத் தடைபடச் செய்யாதீர், போய் வாரும்.

அ. இவ்விடம் வெயில் வந்து விட்டது, இந்த நோய்க்கு குளிர்ந்த இடத்தில் தங்கி யிருக்கவேண்டும், ஆகவே இக்கட்டிலை வேறு இடத்திற்குக் கொண்டுபோங்கள்.

தா. பெண்காள், மஹாராஜாவின் கட்டளைப்படிச் செய்யுங்கள்.

[தாரிணி, பரிவ்ராஜிகை, பாஙகிகள் போகின்றனர்.]

அ. ஜெயசேனா, இரகசியமான வழியாய் என்னைப் பிரமதவனத்திற்கு அழைத்துச் செல்.

பி இவ்வழி—இவ்வழி—மஹாராஜா.

அ [போகும்பொழுது] ஜெயசேனா, கௌதமன் தன வேலையை முடித்திருப்பானா?

பி. இருப்பார் என எண்ணுகிறேன். [போகிறார்கள்.]

**காட்சி முடிகிறது.**

# மூன்றும் காட்சி

இடம்:—பிரமத வனம்.

அரசனும் பிரதீஹாரியும் வருகிறார்கள்.

விதூஷகன் எதிர்புறமாக விரைந்து வருகிறான்.

வி. மஹாராஜா! விர்த்தியடைவீர்களாக!—உமது மங்கள கரமான விஷயமானது முடிக்கப்பட்டது.

அ. ஜெயசேனா, நீயும் உன்னுடைய வேலையைப் பார்ப்பாய்.

பி. மஹாராஜாவின் கட்டளைப்படி. [போகிறாள்.]

அ. நண்பனே, என்ன மூடியாயிருக்க வேண்டும் மாதவிகை! கொஞ்சமாவது அவள் சந்தேகிக்கவில்லையா?

வி. மஹாராணியின் முத்திரை மோதிரத்தைக் கண்டபின் எப்படி சந்தேகிப்பாள்?

அ. முத்திரை மோதிரத்தைப் பற்றி நான் பேசவில்லை. சிறையில் வைக்கப்பட்ட இருவர்களும் என்ன காரணத்தினால் விடுவிக்கப்படவேண்டும்? மஹாராணியின் மற்ற பாங்கிகளை யெல்லாம் விட்டு, விதூஷகனிடம் இவ்விஷயம் சொல்லி அனுப்பப்படுவானேன்? இம்மாதிரியான கேள்விகளெல்லாம் கேட்டிருக்க வேண்டுமல்லவா?

வி. ஏன்? இக்கேள்விகளெல்லாம் கேட்கப்பட்டேன். நான் மந்தபுத்தி யுடையவனா யிருந்த போதிலும், அவள் கேள்விகளுக்கெல்லாம் உடனே பதில் சொல்ல சக்தியுடையவனாயிருந்தேன்.

அ. அதைச் சொல் ஆனால்.

வி. அவரது நட்சத்திரமானது கெடுதியா யிருந்தபடியால், அதற்குப் பரிஹாரமாக விலங்கிற்பூட்டப் பட்டவர்களை யெல்லாம் விடுதலைசெய்ய வேண்டுமென்று மஹாராஜா அவர்கள் ஜோஸ்யர்களால் சொல்லப்பட்டார், என்று கூறினேன்

அ. அதற்கப்புறம்?

வி. மஹாராணி இதைக் கேட்டதும், ஐராவதி தேவியின் மனம் கோணுதபடி, மஹாராஜா அவர்களே இவர்களை விடுதலை செய்தார் என்று தோற்றும்படியாக, என்னிடம் இவ்வுத்திரவை அனுப்பினுர்கள்—என்று சொன்னேன். பிறகு, இது யுக்தமே, என்று இணங்கினுள்

அ [அவனைக்கட்டி] நண்பனே! உனக்கென்மீது உண்மையில் பிரியமுண்டு என்பதற்குச் சந்தேகமில்லை.

வி. புறப்படும் சீக்கிரம் தாங்கள்; வசந்தக்கிரஹத்தில் மாளவிகையையும் அவள் தோழியையும் வைத்துவிட்டு, உம்மைக்காண்பதற்காக விரைந்து வந்தேன்.

அ. அவளை நான் நல்வரவழைக்கப் போகிறேன்—நீ முன்பு போ.

வி. பின்னுல் வாரும். [போகிறுர்கள்.]

காட்சி முடிகிறது.

# நான்காவது காட்சி.

இடம்:—வசந்தக்கிரஹம்.

ஒரு புறமாக அரசனும் விதூஷகனும் வருகிறார்கள்.

அ. அந்தோ! ஐராவதி தேவியின் பாங்கியாகிய சந்திரிகை, புஷ்பங்கள் பறித்தவண்ணம், நாமிருக்கும் இடம் நோக்கி விரைந்து வருகிறாள்; ஆகவே இச்சுவரின் பின்னால் நாம் மறைந்து கொள்வோம்.

வி. ஆமாம், கள்வர்களும் காமுகர்களும் சந்திரிகை எதிரிற் படலாகாது.

[ஒளிந்து கொள்கின்றனர்]

அ. கௌதமா, உன்னுடைய சகி, மாளவிகை, என்னை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.—வா இப்படி, இந்தப் பலகணி அருகில் நின்று கவனிப்போம்—

[அங்ஙனமே செய்கின்றனர்.]

மாளவிகையும் பகுளாவளிகையும் வருகிறார்கள்.

ப. சகி, உனது பிராண நாதருக்கு நமஸ்காரம் செய்.

அ. [ஒரு புறமாக] அவளிடம் என்படத்தைக் காட்டுகிறாளென நினைக்கிறேன்.

மா. உங்களுக்கு, நமஸ்காரம் செய்கிறேன்—[கதவை நோக்கி] சகி, என்னை ஏமாற்றுகிறாய்.

ப ஏன்? இதோ உன் பிராணநாதர் படத்தில் வரையப் பட்டிருக்கின்றாரே!

மா. [படத்தை கவனித்துப் பார்த்து] சகி, இன்று இப்படத்தை கவனித்துப் பார்த்து ஆநந்தமடைவது போல், அன்று அவர் எதிரில் நின்ற பொழுது அவரது அழகைக் கண்டு ஆநந்திக்கச் சமயமில்லாமற் போயிற்று—சகி, இது யார் இது? முகத்தை ஒரு பக்கமாய்த்திருப்பிக் கொண்டிருப்பது? பிராணநாதர் மிகுந்த பிரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறாரே.

ப ஆ !—பக்கத்தில் நின்று கொண்டிருப்பது ஐராவதிதேவி.

மா. மஹாராஜா அவர்கள் மற்ற மனைவிகளை யெல்லாம் விட்டு, ஒருத்தியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பதனால், அவருக்கு தாக்ஷிண்யம் கொஞ்சம் குறை வென்றே எண்ணுகிறேன்.

ப. [தனக்குள்] படத்திலிருப்பதை உண்மையென்று நம்பிப் பொறாமைப்படுகிறாள்—வேடிக்கை பண்ணுகிறேன்—[வெளிப்படையாய்] சகி, அவர்கள் மீது தான் மஹாராஜா வுக்கு மிகவும் பிரியம்.

மா. ஆயின் எதற்காக என்மனதை ஆயாசப்படுத்திக் கொள்ளவேண்டும் நான்? [முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறாள்]—பூஜ்யரான கௌதமரும் இங்கு மஹாராஜாவின் அருகில் இருக்கிறாற் போலிருக்கிறது.

ப. இன்னும் கோபம் விடவில்லையா ?

மா. அதிக நாழிகையாக நான் கோபித்துக் கொண்டிருக்கி றேன் என்று நீ நினைப்பதானால், அந்தக் கோபத்தை மாற்றிக்கொள்கிறேன்.

அ. [மாளவிகையின் எதிரிற்போய்] கமலலோசனி, இதென்ன, படத்தில் வரைந்திருப்பதைப் பற்றி என்மீது கோபம் கொள்ளலாமோ ? உனக்கே தாசனான நான் ஸ்வரூபத் துடன் இதோ நிற்கிறேன்.

ப. மஹாராஜாவுக்கு ஜெயமுண்டாகுக !

மா. [தனக்குள்] என்ன ஆச்சரியம் ! படத்தில் வர்ணிக்கப் பட்ட பிராணநாதர் மீது பொருமை கொண்டேனே !

[வெட்கத்துடன் முகத்தைக் கவிழ்ந்து, அஞ்சலி செய்கிருள்.]

வி. என்னதாம் உதாசீனராயிருக்கின்றீர் இன்னும் !

அ. உனது தோழி நம்பக்கூடியவளாயில்லை.

வி. ஏன் உமக்கு இவ்வளவு அவநம்பிக்கை ?

அ. கேட்பாயாக—ஸ்வப்னத்தில் என் கண்ணெதிர்ப்பட்டும் க்ஷணத்தில் மறைந்து போகிருள்; என் கரங்களால் கட்டியணைத்த போதிலும் திடீரெனத் தப்பித்துக் கொள்ளுகிருள், அப்படியிருக்க, நண்பனே, கானல ஜலம் போன்ற கலவியினுல் மோசம் போன காதலினுல் வருந்தும் என்மனமானது, அவளிடம் எப்படி நம்பிக்கை வைக்கும் ?

ப. சகி, பன்முறை உன் பர்த்தா மோசம் போயிருக்கின்ருராம்; இம்முறை உன்னிடம் நம்பிக்கை வைக்கும்படிச் செய்.

மா. சகி, துர் அதிர்ஷ்டமுடைய எனக்கு, தூக்கத்திலும் அவருடன் சேர்க்கை, அசாத்தியமான தாயிருக்கிறதே !

ப. தாங்கள் தான் இதற்குபதில் கூறவேண்டும்.

அ பதிலில் என்ன பிரயோஜனம் ? பஞ்சபாணனுல் அக்னி சாட்சியாக, உனது தோழிக்கு நான் தத்தம் செய்யப் பட்டேன்—என்னைச் சேவிப்பதற்கன்று—நான் ரகஸ்யமாக அவளைச் சேவிப்பதற்கு !

ப. தங்களுடைய அனுக்கிரஹம்.

வி. பகுளவளிகா, அதோபார் அந்த அசோக மரத்தின் துளிர்களை ஒருமானனது மேயப்பார்க்கிறது, வா— அதைத் துரத்துவோம்.

ப. அப்படியே. [புறப்படுகிறாள்.]

அ. நண்பனே, இச்சமயம் எங்களிருவரையும் காப்பதில் நீ மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாயிருக்க வேண்டும்.

வி. கௌதமனுக்கு இதை நீர் கற்பிக்கவேண்டுமோ?

ப. பூஜ்யரான கௌதமரே, நான் செடிமறைவில் இருக்கிறேன். தாம் கதவைக் காத்திரும்.

வி. நியாயமே. [பகுளவளிகை போகிறாள்.]

இந்த ஸ்படிக ஆசனத்தின் மீது படுத்துக்கொள்ளுகிறேன்.—[அங்ஙனம் செய்து] இந்தச் சலவைக்கல்லானது என்ன குளிர்ச்சியாயிருக்கிறது.

[உறங்கிவிடுகிறான்.]

அ. கண்மணி, என்னைக் கட்டியணைவதற்கு ஏன் அஞ்சுகின்றாய்?

மா. மஹாராணியின் பயத்தினால்—என் மனதுக்கினியதைச் செய்ய—அசக்தளாயிருக்கிறேன்.

அ. அஞ்சுகமே! நீ கொஞ்சமேனும் அஞ்ச வேண்டாம்; நான் இருக்கிறேன்.

மா. சின்ன ராணி எதிரில் இருக்கும்பொழுது பிராணநாதருடைய பயப்படாத சக்தியைக் கண்டிருக்கிறேன்!

அ. கோவைக் கனியே!—கோபியாதே!—எல்லோரிடத்தும் மரியாதை பாராட்ட வேண்டியது எங்கள் குலத்தாருடைய விரதமாகும். ஆகவே கண்மணி, உன்னை யணையாவிட்டால் என் ஆவி தரியாது; ஆகவே நெடுங் காலமாய்

உன்மீது காதல் கொண்டிருக்கும் அடியேனுக்கு அனுக்கிரஹம் செய்வாயாக!

[மாளவிகையுடன் செடி வீட்டிற்குள் போகின்றார்.]

ஐராவதி நிபுணிகையுடன் மற்றொரு பக்கம் வருகிறாள்.

ஐ. அடி நிபுணிகா, வசந்தக் கிரஹத்தின் தாழ்வாரத்தில் பூஜ்யரான கௌதமர் தனியாகத் தூங்குவதை வாஸ்தவத்திற் கண்டதாகவா கூறினாள் சந்திரிகை?

நி. இல்லாவிட்டால் அவ்வாறு உம்மிடம் உரைத்திருப்பேளோ?

ஐ உயிர் தப்பிப் பிழைத்த, பிராணநாதருடைய பிரிய மித்ரனுடைய க்ஷேமத்தை விசாரித்து விட்டு வருவோம் வா—அன்றியும்—

நி. தேவியவர்கள்—வார்த்தையை முடிக்காதிருக்கிறீர்களே.

ஐ. எனது பிராணநாதரையும் மன்னிப்பு கேட்க வேண்டும்.

[இருவரும் வசந்தக் கிரஹத்தருகிற் செல்கின்றனர்.]

நி. தேவி, பூஜ்யரான கௌதமர் வசந்தக் கிரஹத்தின் வாயிலருகில், கடைத்தெருவின் காளையைப்போல், உட்கார்ந்து கொண்டே தூங்கிக் கொண்டிருக்கிறார்.

ஐ. என்ன கஷ்டம்! விஷக்கடியின் விகாரமெல்லாம் விட்டகன்றதெனக் கோருகிறேன்.

நி. முகம் மிகவும் தெளிவாய்த் தானிருக்கிறது. துருவசித்தி சிகிச்சை செய்தனரன்றோ?—ஆகவே இவருக்காகப் பயப்படவேண்டியதில்லை.

வி. [தூக்கத்தில்] பகவதி, மாளவிகை!—

நி. தேவி! கேட்டீரா'—இந்தப் பாழும் திருட்டுப் பிராம்மணன் எந்தப் பட்சம் இருக்கிறானென எப்பொழுதும்

சொல்ல முடியாது! சுப காலங்களில் நம்மால் கொடுக்கப் படும் தின்பண்டங்களால் எப்பொழுதும் தன் வயிற்றை நிரப்பிக் கொண்டு, இப்பொழுது ஸ்வப்னத்தில் மாளவி கையின் பெயரைச் சொல்லுகிறான்!

வி. [தூக்கத்தில்] நீ ஐராவதியைவிட அதிகப்பட்டவளாய் விட்டாய்!

நி. இதுதான் கேடு! இந்தத் தூணின் பின்னால் மறைந்து நின்று, பாம்பிற்கு எப்பொழுதும் பயப்படும் இப்பாழும் பிராம்மணனை, பாம்பைப்போல் வளைந்திருக்கும் அத்தடி யினால் பயப்படுத்துகிறேன்.

ஐ. நன்றியற்ற இவனை இவ்வாறு நன்றாய் தண்டிக்க வேண் டியதே.

[நிபுணிகை தடியை விதூஷகன் மீதெறிகிறாள்.]

வி. [திடீரென்று பயந்து எழுந்து] அபயம்! அபயம்! நண்பனே! ஒரு பாம்பானது என்மீது விழுந்தது!

அ. [உள்ளிருந்து வெளியே ஓடி வந்து] நண்பனே! பயப்படாதே! பயப்படாதே!

மா. [அரசனைப் பின் தொடர்ந்து] நாதா, அஜாக்கிரதையாய் அங்கு ஓடாதீர்! அங்கு சர்ப்ப மொன்றிருப்பதாகச் சொல்லுகிறார்!

ஐ. ஹா! கஷ்டம்! கஷ்டம்! பிராணநாதர் இங்குதான் ஓடி வருகிறார்.

வி. என்ன!—இது வெறும் தடிதான்!—கேதகி முள்ளினால் குத்திக்கொண்டு சர்ப்பம் கடித்தது என்று நான் சொன் னதற்குப் பலனாக வாஸ்தவத்தில் ஒரு சர்ப்பம் என்னைக் கடித்ததென நினைத்தேன்!

பகுளவளிகை திடீரென்று வருகிறாள்.

ப. மஹாராஜா அவர்கள் இங்குவரவேண்டாம்! இங்கு கோணலாய் சர்ப்பத்தைப் போல் சஞ்சரிக்கும் ஒன்று காணப்படுகிறது.

ஐ. [திடீரென்று தூணின் பின்பக்கத்திலிருந்து வெளிவந்து அரசனை அணுகி] பகற்பொழுதில் சேரவேண்டுமென்று விரும்பிய உங்கள் இருவருடைய மனோரதமும் தடங்கலின்றி நிறைவேறியதா?

[ஐராவதியைக் கண்டு அரசன் முதலியோர் திகைத்து நிற்கின்றனர்.]

அ. கண்மணி, இதென்ன எப்பொழுது மில்லாதபடி இப்படிப் பேசுகிறாய்?

ஐ. பகுளவளிகா! இவ்விருவருக்கும் நீ தூது போன விஷயத்தில் உன் பிரதிக்ஞை முற்றிலும் நிறைவேறினதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்!

ப. தேவியவர்கள் தயவு செய்ய வேண்டும். தவளைகள் கத்துகின்றனவென்று தரணியின்மீது தயையின்றி இருப்பாரோ இந்திரன்?

வி. தாங்கள் இப்படி நடக்கலாகாது; தான் பணிந்ததை நீங்கள் அசட்டை பண்ணியதையும் மஹாராஜா அவர்கள் தங்களைப் பார்த்த மாத்திரத்தில் மறந்து விட்டார். தாங்கள் இன்னும் மனமிரங்காதிருப்பது மரியாதையல்ல.

ஐ. இப்பொழுது நான் கோபித்துக் கொண்டு என்ன செய்வது?

அ. அகாரணமாய்க் கோபம் கொள்வது உனது அருங்குணத்திற்கு அடுத்ததன்று.

ஐ காரணமின்றியென்று பிராணநாதர் உரைத்தது மிகவும் சரியே! எங்கள் பாக்கியம் இன்னொருத்திக்குப் போய் விட்டபொழுது, நான் இன்னும் கோபித்துக் கொண்டால், நான் எல்லோரும் நகைக்க ஆளாவேன்!

அ. நீ வேறாக எண்ணுகிறாய், என் வரையில் கோபத்திற்குக் காரணம் காண்கிலேன். ஏனெனில், நமது வேலையாட்களை, குற்றஞ் செய்தவராயினும், உற்சவ தினங்களில் சிறையில் வைத்திருக்கலாகாது, இக்காரணத்தினால் இவர்களை விடுவித்தேன், இவர்களும் என்னைப் பணிந்து செல்ல இங்கு வந்தனர்.

ஐ நிபுணிகா, மஹாராணியிடம் போய்—இன்று தங்களுக்கு என்மீதுள்ள பட்சபாதத்தை நன்றாயறிந்தேன் என்று சொல்.

நி. அப்படியே ! [போகிறாள்.]

வி. [தனக்குள்] அந்தோ! அநர்த்தம் வந்தது!—கூண்டைவிட்டுத் தப்பின புறாவானது கருடன் வாயிலகப்பட்டது !

நிபுணிகை திரும்பி வருகிறாள்.

நி. தேவி, மாதவிகையை அகஸ்மாத்தாய் நான் சந்திக்க, அவள் இப்படி நடந்ததென்று என்னிடம் தெரிவித்தாள்.

[ஐராவதியின் காதில் ஏதோ சொல்லுகிறாள்.]

ஐ. [தனக்குள்] எல்லாம் ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது' சத்யமாக இத்திருட்டுப் பிராம்மணன் செய்த சூழ்ச்சியாகத் தானிருக்க வேண்டும் இது [வெளிப்படையாய் விதூஷகனைப் பார்த்து] ஓகோ! காம நீதி கற்றுணர்ந்த இந்த மந்திரியவர்களின் காரியமாகும் இது!

வி. பகவதி, அந்த நீதியில் ஒரு அட்சரமாவது நான் படித்திருந்தால் காயத்திரியையும் நான் மறந்தவனாவேன்!

அ. [ஒரு புறமாக] இந்த சங்கடத்தினின்றும் எப்படி என்னை விடுவித்துக்கொள்வது ?

ஜெயசேனை விரைந்து வருகிருள்.

ஜெ. மஹாராஜா! ராஜகுமாரி வசுலட்சுமி, தான் விளையாடிக்கொண்டிருந்த பந்தின் பின்னுல் ஓடினபொழுது, பிங்களவானரத்தினுல் மிகவும் பயப்படுத்தப்பட்டாள்; மஹாராணியவர்கள மடிமீது இருத்திய போதிலும், பெருங்காற்றினுல் மோதப்பட்ட இளம் தளிரைப்போல், நடுநடுங்கினவர்களாய், இன்னும் பிரக்ஞை அடையவில்லை'

அ. அந்தோ! சுபாவத்தில் குழந்தைகள் மிகவும்,பயமுடையவர்கள்!

ஐ. பிராணநாதா,' குழந்தையின் மனதைத் தேற்றவிரைந்து போம்!—பயத்தினுல் உண்டான அசௌக்கியம் அதிகப் படாதபடி பார்த்துக்கொள்ளும்!

அ. இதோ போய் பிரக்ஞைவரப் பார்க்கிறேன்.

[விரைந்து போகிருர்.]

வி. [தனக்குள்] பிங்களவானரமே! நல்லகாரியம் செய்தாய்! பெரியசங்கடத்தினின்றும் எங்களைக் காப்பாற்றினுய்!

[அரசனைப் பின் தொடர்கிருன். ஐராவதி நிபுணிகை முதலியோர் ஒரு பக்கமாயும், மாளவிகை பகுளவளிகை மற்ருெரு பக்கமாயும் போகின்றனர் விரைந்து.]

காட்சி முடிகிறது.

# ஐந்தாம் அங்கம்

## முதற் காட்சி.

இடம் —அரண்மனை உத்யானவனம்.

ஒரு தோட்டக்காரி வருகிறாள்

தோ. அம்மட்டும் விதியானது மாளவிகையின்பேரில் கருணை கூர்ந்ததே! அவள் மீது மிகவும் கோபங்கொண்ட மஹாராணியவர்கள், இப்பொழுது அசோக விருக்ஷம் மலர் எடுத்ததைக் கண்டு முகமலர்ச்சியுடன் அவளை நோக்குவார்கள். எங்கே மஹாராணி? — மஹாராணியின் வேலைக்காரனான கூனனான சாரசகன், ஏதோகாரியமாக செவ்வரக்கினால் முத்திரையிடப்பட்ட ஒரு பெட்டகத்தை எடுத்துக்கொண்டு சதுரங்க சாலையினின்றும் வருகிறான்—அவனைக் கேட்டுப் பார்க்கிறேன்.

சாரசகன் வருகிறான்.

சாரசகா, எங்கே போகிறாய்?

சா. மதுகரிகா, மஹாராணி வித்யாபாரகர்களாகிய பிராம்மணர்களுக்கு நிதயம் தட்சிணை கொடுக்கப் போகிறார்கள், அதைப் பூஜ்யரான புரோகிதரிடம் கொடுக்கப் போகிறேன்.

தோ. எதற்காக?

சா. சேனாபதியானவர், யாகக் குதிரைக்குக் காவலாளியாக வசுமித்திரரை ஏற்படுத்தினார் என்று கேட்டது முதல், அந்த ராஜ குமாரனுடைய ஆயுள் விர்த்திக்காக, தினம் பதினெட்டு சுவர்ணங்கள் தட்சிணையாகக் கொடுத்து வருகிறார்கள் பிராம்மணோத்தமர்களுக்கு.

தோ. சரிதான், ஆயினும் மஹாராணி எங்கே இருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்?

சா. மங்களகிரஹத்தில் வீற்றிருக்கிறார்கள்; விதர்ப்பதேசத்திலிருந்து அவர்கள் சகோதரன் அனுப்பிய கடிதத்தை ராயசங்கள் படிக்கக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

தோ பிறகு விதர்ப்ப தேசத்து விர்த்தாந்தம் என்ன?

சா. வீரசேனரைத் தலைவனாக உடைய நமது மஹாராஜாவின் சைனியங்கள் விதர்ப்ப தேசத்தரசனை வென்று விட்டதாகவும், வீரசேனருடைய பந்துவாகிய மாதவ சேனர் சிறையினின்றும் மீட்கப்பட்டதாகவும் கேள்விப்படுகிறேன்; அன்றியும் அவரால் அரசரிடம் அனுப்பப்பட்ட தூதர், அநேகம் விலையிலா ஆபரணங்களையும் வாகனங்களையும், கலை நன்கு பயின்ற வேலைக்காரிகளையும், காணிக்கையாகக் கொண்டு, மஹாராஜாவை நாளைத் தினம் காலை காணவிருக்கிறதாகவும் சொல்லப்படுகிறது.

தோ. போ, உன் வேலையைப்பார், நான் போய் மஹாராணியைப்பார்க்கிறேன்.

[வெவ்வேறு பக்கமாகப் போகிறார்கள்.]

**காட்சி முடிகிறது.**

# இரண்டாம் காட்சி

இடம்:—தோட்டத்திற்குப் போகும்வழி.

அரசர் விதூஷகனுடன் வருகிறார்.

அ. என்மனமானது வெயிலினால் வாட்டப்பட்டு மழையினால் குளிர்ப்படும் தாமரையைப்போல், ஒரு புறம் என்காதலியைக் குறித்து நினைக்குங்கால, அவளை அடைவது அசாத்தியமாயிற்றே என்று துன்புறுகிறது, மற்றொரு புறம், எனது சைனியங்கள் விதர்ப்ப நாட்டரசனை வென்றதாகக் கேள்வியுற்று சந்தோஷப்படுகிறது.

வி. எனக்குத் தெரிகிற வரையில், தாம் முற்றிலும் சந்துஷ்டியே அடைவீர்களென்று தோற்றுகிறது.

அ. எப்படி ?

வி. இன்று மஹாராணியவர்கள், பண்டிதையாகிய கௌசிகியிடம் "பகவதி, தாம் அலங்காரம் செய்வதில் தம்மை விட கெட்டிக்காரிகளில்லையென்று கர்வம் கொண்டிருப்பதால், விதர்ப்பதேசத்தில் வழங்கும் விவாஹத்திற்குரிய ஆடையாபரணங்களால், மாளவிகையை, அலங்காரம் செய்வதில் உமது ஆற்றலைக் காட்டும்" என்றார்களாம்; அவர்களும் மாளவிகையை நூதனமாக அலங்காரம் செய்தார்களாம்; ஒரு வேளை மஹாராணி உமது மனோரதத்தைப் பூரணம் செய்ய உத்தேசித்திருக்கலாம்.

பிரதீஹாரி வருகிறாள்.

பி. மஹாராஜாவுக்கு ஜெயமுண்டாகுக! மஹாராணியவர்கள், புஷ்பித்திருக்கும் பாக்கியத்தை யடைந்த பொன் அசோகவிருட்சத்தை, தாங்கள் பார்ப்பதினால், தான்

மேற்கொண்ட பிரயத்னமானது பலனுடைத்தாய் முடிய வேண்டுமென விரும்புவதாகத் தம்மிடம் விஞ்ஞாபனம் செய்யச் சொன்னார்கள்.

அ. தேவி அங்கே யிருக்கின்றார்களா ?

பி. ஆம், அந்தப்புர ஸ்திரீகளை கிரமப்படி சன்மானம் செய்து சந்தோஷிப்பித்து அனுப்பிவிட்டு, மாளவிகை யை முன்னிட்ட தன் பரிஜனங்களுடன், தங்கள் வரவை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

அ [வீதூஷகனைச் சந்தோஷத்துடன் பார்த்து விட்டு] ஜெயசேனா, அங்கு அழைத்துச் செல்.

பி. இவ்வழி, இவ்வழி, மஹாராஜா.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## மூன்றாவது காட்சி.

இடம்:—அரண்மனைப் பூந்தோட்டம்.

நடுவில் அசோக விருட்சமானது புஷ்பித்திருக்கிறது.

தாரிணி, மாளவிகை பரிவ்ராஜிகை முதலியோர்

புடைசூழ அதன் அருகில் நிற்கிறாள்.

அரசர், விதூஷகனுடன் ஒரு புறமாக வருகிறார்.

வி. [ஒருபுறமாக] நண்பனே! சந்தோஷமாயிரும். நாம் அருகில்வரும் பொழுதும் தாரிணி தேவி, மாளவிகையைப் பக்கத்திலிருக்க இசைந்திருக்கிறார்கள்.

மா. [ஒருபுறமாக] என்னை விவாஹ ஆடையில் அலங்கரித்ததின் காரணம் நான் அறிவேன், ஆயினும், என்மனமானது தாமரையிலையிற் பட்ட தண்ணீரைப் போல் தத்தளிக்கிறது; என் இடது கண்ணும் படபடவென்று துடிக்கிறதே!

வி. [ஒருபுறமாக] நண்பனே, மாளவிகை மணக்கோலத்தில் மிகவும் சோபிக்கின்றாள்.

தா. [மஹாராஜாவை எதிர்கொண்டு] பிராணநாதருக்கு ஜயமுண்டாகுக!

பரி. மஹாராஜாவுக்கு ஜெயமுண்டாகுக!

அ. பகவதி அபிவாதனம் செய்கிறேன்.

பரி. உமது மனோபீஷ்டம் நிறைவேறுமாக!

தா. [புன்னகையுடன்] பிராணநாதா, அரண்மனையிலுள்ள தருணீஜனங்களுக்கு சஹாயமான இந்த அசோக விருக்ஷமானது, உங்களைச் சந்திப்பதற்கு சங்கேதஸ்தமாக ஏற்படுத்தப்பட்டது.

[அரசர் வெட்கத்துடன் அசோக விருட்சத்தைச் சுற்றிவருகின்றார்.]

வி. உம்முடையபாடு அதிர்ஷ்டம் தான்—இனி தடையின்றி இப்புஷ்பவதியின் அழகைப்பாரும்.

தா. யாரை ?

வி. பவதி, புஷ்பித்த இந்த அசோக விருட்சத்தின் அழகை —என்று சொன்னேன்.

[எல்லோரும் உட்காருகின்றனர்.]

கஞ்சுகி வருகிறான்.

க. மஹாராஜாவுக்கு ஜெயமுண்டாகுக ! மஹாராஜா, விதர்ப்பதேசத்திலிருந்து காணிக்கையாக அனுப்பப்பட்ட கலையுணர்ந்த கன்னியர்க்குள் இருவர், அங்கிருந்து வந்த சிரமத்தினால் அலுப்படைந்திருந்தபடியால், தம்முடைய சந்நிதானத்திற்கு அனுப்பப்படவில்லை, இப்பொழுது அவர்கள் தங்கள் எதிரில் வரயோக்கியதையுடையவர்களா யிருக்கிறார்கள், ஆகவே அவர்களைப் பற்றி மஹாராஜாவின் கட்டளை என்னவோ தெரிவிக்கும்படியாக, மந்திரியவர்கள் விஞ்ஞாபனம் பண்ணிக் கொள்ளுகிறார்.

அ. அழைத்துவா அவர்களை.

க. மஹாராஜாவின் கட்டளைப்படி.

[போய் இரண்டு சேடியரை அழைத்து வருகிறான்.]

இவ்வழி, இவ்வழி.

[அவர்களைப் பார்த்ததும் மாளவிகை யும் பரிவ்ராஜிகையும் ஒருவரை யொருவர் உற்றுப்பார்க்கின்றனர்.]

இ. சே. மஹாராஜாவுக்கு ஜெயமுண்டாகுக! மஹாராணிக்கு ஜெயமுண்டாகுக!

அ. எக்கலை கற்றுணர்ந்தவர்கள் நீங்கள்?

இ. சே. மஹாராஜா! சங்கீத பயிற்சி யுடையோம் நாங்கள்.

அ. தேவி, இவ்விருவர்களுள் ஒருத்தியை நீ எடுத்துக் கொள்.

தா. மாளவிகா, இதோபார், இவ்விருவர்களுள் சங்கீதம் உன்னுடன் பழக, யாரை விரும்புகிறாய்?

இ. சே. [மாளவிகையைப் பார்த்து] ஹா! ராஜகுமாரி'—ஜெயமுண் டாகுக! ஜெயமுண்டாகுக ராஜாகுமாரிக்கு!

[மாளவிகை அவர்களைக் கட்டிக் கொள்ள, மூவரும் கண்ணீர் விடுகின்றனர்.]

அ. யார் நீங்கள்?—இது யார்?

இ. சே. மஹாராஜா! இவர்கள் தான் எங்கள் அரசகுமாரி.

அ எப்படி! எப்படி!

மூ. சே. மஹாராஜா! தயைசெய்து கேட்பீராக! விதர்ப்ப தேசத்தரசனை ஜெயம் பொருந்திய உமது சைனியம் வென்றபொழுது, தங்களால் சிறையினின்றும் விடுவிக் கப்பட்ட மாதவசேனர் எனும் பெயருடைய ராஜகுமா ரருடைய தங்கை இவர்கள், மாளவிகை எனும் பெயர் பூண்டவர்கள்.

தா. ஐயோ' ராஜகுமாரியா இவள்! இதை யறியாது, சந்தன மரத்தைப் பாதுகையாய் உபயோகிப்பது போல், இவளைப் பாங்கியாக இருக்கச் செய்தேனே!

அ. அப்படியிருக்க இந்த ஸ்திதிக்கு எப்படி வந்தாள் ?

மா. [தனக்குள்] விதியின் கொடுமையால்!

இ சே. மஹாராஜா தயைசெய்து கேட்பீராக! எங்கள் ராஜ குமாரனான மாதவசேனர், அவர் தாயாதியின் கையில கப்பட்ட பொழுது, அவருடைய மந்திரி, பூஜ்யராகிய சுமதி, பாங்கிகளாகிய எங்களைப் போன்றவர்களைவிட்டு, இவர்களை மாத்திரம் இரகசியமாய்க் கொண்டு போய் விட்டார்.

அ இது முன்பே என்னால் கேட்கப்பட்டது. அதன்பிறகு என்ன நேர்ந்தது ?

இ. சே மஹாராஜா, அதன் பிறகு நடந்தது நாங்கள் அறியோம்.

பரி. அதன் பிறகு நடந்ததை அதிர்ஷ்டஹீனையாகிய நான் கூறுகிறேன்.

இ சே. ராஜகுமாரி, இந்தக்குரலானது பூஜ்யையான கௌசிகி யின் குரல்போல் எங்கள் காதிற் படுகிறது.

மா. ஆம், அவர்கள் தான் இவர்கள்.

இ. சே சன்யாசியின் உடையைத் தரித்திருப்பதினால், பூஜ்யை யான கௌசிகையை நாங்கள் அறிவது அசாத்தியமாயி ருந்தது—பகவதி! நாங்கள் தங்கள் பாதங்களைப் பணி கிறோம்.

பரி. உங்களுக்குக்ஷேம முண்டாகுக!—மஹாராஜா, இனி கேளும்—மாதவசேனருடைய மந்திரியாகிய சுமதியே என் தமயன், அவர் ராஜகுமாரியை முன்சொன்னபடி கொண்டு வந்துவிட, நாஙகளிருவரும், விதிசதேசத்திற் குப்போய்க் கொண்டிருந்த சிலபிரயாணிகளுடன், உமக்கு இக்கன்னிகையைக்கடிமணம் புரியும் பொருட்டு, சேர்ந்துவந்தோம்—நாங்களெல்லோரும் பகலெல்லாம் பிரயாணம் செய்து, இரவில் ஓர் காட்டில் தங்கியிருந்த பொழுது—வழிப்போக்கர்களைப் பறிந்துண்ணும் சிலர், வில்லுங்கையுமாய் எங்களைவேகத்துடன் எதிர்த்தனர்

—வணிகர்கள் பக்கமிருந்த வீரர்கள் கள்வர்களால் முறியடிக்கப்பட, அவர்கள் கையிற்பட்ட இந்த ராஜ குமாரியை மீட்பதற்கு எத்தனிக்க, அப்பிரயத்னத்தில், தன் எஜமானனுக்குச் செலுத்தவேண்டிய கடமையை, தன் உயிரைக் கொடுத்து—செலுத்தினார்.—

அனைவரும். அந்தோ, சுமதி இறந்து விட்டாரா ?

ப. பிறகு, மூர்ச்சையாயின நான் பிரக்ஞை அடைந்த பொழுது, இந்த ராஜகுமாரி காணப்படவில்லை—பிறகு—என் சகோதரன் உடலிற்கு அக்னி சம்ஸ்காரம் செய்து விட்டு, விதவையாகிய நான் மறுபடியும் துக்காக்கிராந்தளாய் இத்தேயம் வந்து சன்யாசிகளுக்குரிய இக்காஷாயவஸ்திரத்தை அணிந்தேன்.

அ சஜ்ஜனர்களுடைய மார்க்கம் இதுதான்—பிறகு ?

ப. பிறகு, வனவாசிகள் கையினின்று வீரசேனரால் மீட்கப்பட்டவர்களாய் இவர்கள், மஹாராணியிடம் அனுப்பப்பட, நான் அரண்மனையை அடைந்தபொழுது, இவர்களைப் பார்க்கலானேன்—இதுதான் என் கதையின் முடிவு

மா. [தனக்குள்] மஹாராஜா இனி என்ன சொல்லப் போகிறாரோ ?

அ. அந்தோ! துர் அதிர்ஷ்டமானது என்ன ஹீனஸ்திதிக்குக் கொண்டு வருகிறது! உயர்ந்தப்பட்டுவஸ்திரமானது மலினமடைந்த ஸ்நான ஆடையாக உபயோகிக்கப்படுவதேபோல், மஹாராணி எனும் பெயரால் அழைக்கத் தக்க இப்பெண்மணி, பாங்கியாக உபயோகிக்கப்பட்டாளல்லவா ?

தா. பகவதி. மாளவிகை உயர்குலத் துதித்தவள் எனனும் உண்மையை நீர் உரையாமலிருந்தது தவறல்லவா ?

ப. சாந்தம் பாபம்! அப்படியன்று. ஒரு காரணம் பற்றியே அதை நான் கூறாமலிருந்தது.

தா அது என்ன காரணமா யிருக்கலாம்?

ஐ. அது சொல்லத் தக்கதாயின் சொல்லுங்கள்.

ப. கேளுங்கள். இவர்களுடைய தந்தை உயிருடன் இருந்த பொழுது, ஒரு சாதுவானவர் இந்த ராஜகுமாரி ஒரு வருஷகாலம் பணிவிடைப் பெண்ணாயிருந்து பிறகு உத்தம புருஷனைப் பர்த்தாவாகப் பெறுவாள் என்று கூறினதை நேரிற்கேட்ட நான், அவர் வாக்கானது எப்பொழுதும் பொய்த்திடாது என்பதை அறிந்தவளாய், இவர்கள் உமது பாங்கியாயினபொழுது, அக்காலம் கடக்கட்டும் என்று மௌனமா யிருந்தேன்; அப்படி நான் செய்தது சரியென்றே எனக்குத் தோன்றுகிறது.

ஐ. அப்படி பொறுத்திருந்தது யுக்தமே.

தா. மாளவிகா, இப்படிவா, அசோக மரத்தைப் புஷ்பிக்கச் செய்தால் உன் மனோரதத்தை நான் பூர்த்தி செய்கின்றேன் என்று சொன்னேன் அல்லவா?—[அவள் கரத்தைப் பற்றி] பகவதி, பூஜ்யரான சுமதி முன்பு நியமித்தபடி, உங்கள் உத்திரவின்மீது, மாளவிகையை மஹாராஜாவுக்கு மணம் புரிவிக்க விரும்புகிறேன்.

ப மஹாராணியின் அனுக்கிரஹம்.

தா. பிராணநாதா, நான் கொடுக்கும் பரிசைப் பெற்றுக்கொள்ளுங்கள்—என்ன இது? பிராணநாதர் என் வார்த்தையை அசட்டை செய்யலாமா?

வி . பகவதி, புது மாப்பிள்ளைகளெல்லாம் கொஞ்சம் லஜ்ஜைப் படுவது உலக வழக்கம்தான்—அன்றியும் தேவி என்கிற பட்டப்பெயருடன் அளித்தாலல்லவோ மஹாராஜா ஏற்றுக் கொள்வார்.

தா. ஆம் அதை மறந்தேன்—ஜெயசேனா, பரிசுத்தம் செய்யப் பட்ட பட்டு வஸ்திரமொன்றைக் கொண்டுவா.

ஜெ மஹாராணியின் கட்டளைப்படி. [போய்க் கொண்டு வருகிறாள்.] தேவி, இதோ.

**தா.** [மாளவிகையை அதனால் போர்த்து] பிராணநாதா, இனி இவளைப் பெற்றுக்கொள்ளும்

[அரசன் கரத்தில் மாளவிகையின் கரத்தை வைக்கிறாள்.]

**ஐ.** இது உன் கட்டளையானபடியால் நான் பதில் உரைப்பதற்கில்லை.

**தா** [பரிஜனங்களைப் பார்த்து] சேடிகாள் !

**பரிஜனங்கள்.** தேவியவர்களுக்கு ஜெயமுண்டாகுக !

[எல்லோரும் மாளவிகையை நமஸ்கரிக்கின்றனர்.]

**தா.** அவர் மனம் உவந்தபடி இன்னும் நான் ஏதேனும் செய்ய வேண்டியதிருந்தால், பிராணநாதர் கூறலாம்.

**ஐ** இதற்குமேல் நான் கோரத்தக்க தென்னுளது ? தேவி ! நீ என்றும் இவ்வாறு என்மீது அநுக்கிரஹம் உள்ளவளாயிருப்பாயாக!—அக்னிமித்ரனுடைய பிரஜைகளெல்லாம் இப்பொழுது அவன் மனம் சந்துஷ்டியடைந்ததுபோல், சந்தோஷப்பட்டு, அபாயமொன்றுமின்றி, அரன் அருளால் காப்பாற்றப்படுவாராக !

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.